உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்



முருகனின் பிரசித்திபெற்ற 151 கோவில்கள்

## பழனி தண்டாயுதபாணி

# தைப்பூச சிறப்பிதழ்

aanmeegamalar.com



மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே
– (திருநீற்றுப் பதிகம்)



PALANI

# SRI ANANDA VILAS

# பழனி
# ஸ்ரீ ஆனந்த விலாஸ்
# விபூதி ஸ்டோர்




**எமது சிறந்த தயாரிப்புகள்:**

- சுத்தமான தரமான பசுஞ்சாணத்தில் தயாரிக்கப்பட்ட விபூதி
- நெல் உமி சாம்பலில் தயாரிக்கப்பட்ட சூப்பர் குவாலிட்டி விபூதி
- ஜவ்வாது வாசனை விபூதி
- வாசனை பூஜா பவுடர்
- வாசனை பூஜா வில்லைகள்
- தசாங்கம் பவுடர்
- ஜவ்வாது பவுடர்
- மஞ்சள் குங்குமம்

2014, 2015, 2016, 2017–ம் ஆண்டுகளுக்கான வளரும் தொழில் அதிபர்களுக்கான
**STAR, GOLDMOON, HUMANITARIAN** விருது பெற்ற நிறுவனம்



## MJF LION DR. M.MUNIYANDI

Zone chairman Zone 32 Lions club of Palani Thangaratham

1, பெரியப்பா நகர், பழைய தாராபுரம் ரோடு பழனி–624601

✆ 04545245627, 9865374473, 9486775627

# பழனி முருகனைப் போன்று ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சிதரும் சர்க்கரை விநாயகர்



திருவாரூர் மாவட்டம் கீழ வீதி பகுதியில் அமைந்துள்ளது, பிரசித்தி பெற்ற சர்க்கரை விநாயகர் கோவில். சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் விநாயகப்பெருமான்சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கி றார். தஞ்சையை ஆட்சி செய்த ராஜராஜசோழன் வழிபட்ட தலம் இது. இங்குள்ள விநாயகரை வழிபட்டு பலன் அடைந்தவர்கள், சர்க்கரை படைத்து வழிபட்டனர். இதனால் இவருக்கு 'சர்க்கரை விநாயகர்' என்ற பெயர் ஏற்பட்டது. இவரை வழிபட்ட மன்னரையும், அவரது சந்ததியினரையும் வெற்றி பெற வைத்து காத்ததால், இவர் 'சந்ததிகளை காக்கும் சர்க்கரை விநாயகர்' என அழைக்கப்பட்டார்.

விநாயகப்பெருமான் சுயம்பு மூர்த்தியாக மேற்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். இவர் வெள்ளிக் கவசத்தில் ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளிக்கின்றார். மகாமண்டபத்தில் அமர்ந்து தியானம் செய்து, விநாயகரை உற்று நோக்கினால், அவர் நம்மிடம் பேசுவது போல் தோன்றும்.

அவ்வாறு வேண்டுதல் நிறைவேறியவர்கள், 108 தேங்காய் உடைத்தும், நெய் விளக்கேற்றியும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். சர்க்கரை, முக்கனி, சொர்ண அபிஷேகம் செய்தும், திராட்சை, வெற்றிலை, தேங்காய் படைத்தும், அருகம்புல், செம்பருத்தி போன்ற விநாயகருக்கு உகந்த மலர்களை சாற்றியும் வழிபட்டால் சகல ஐஸ்வர்யங்களும் வந்துசேரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. திருவாரூர் ரெயில் நிலையத்தின் அருகில் இக்கோவில் அமைந்துள்ளது.

# தடைகளை அகற்றி பழனி முருகனை தரிசிக்க உதவும் விக்ன விநாயகர்



விநாயர் அனைத்து தெய்வத்திற்கும் முதன்மை தெய்வமாக வழிபடக்கூடியவர். அந்தவகையில் பழனி முருகனை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு ஏற்படும் பல்வேறு இன்னல்களை சுக்குநூறாக உடைத்து, தம்பி பழனி முருகனை எந்தவித சிரமம் இன்றி பக்தர்கள் பார்க்க மலை அடிவாடித்தில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கிறார் விக்ன விநாயகர்.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு மலை யேறும் முன் அடிவாரத்தில், அண்ணன் விநாயகரை வணங்கிச் செல்லும் மரபின்படி, கிரிவீதியின் தொடக்கத்தில் விக்ன விநாயகர் கோவில் அமைந் துள்ளது. மலை அடிவாரத்தில் உள்ள இந்த விநாயகரை 'விக்ன விநாயகர்' (தடைகளை நீக்குபவர்) என்று அழைப்பார்கள், இவர் மலை உச்சியில் இருக்கும் முருகனை தரிசிக்க செல்வதற்கு முன் அனைவரும் அவசியம் வழிபட்டு சென்றால் முருகனை எளிதாக தரிசிக்க முடியும் என்று கூறப்படுகிறது.





# பழனி முருகனும் பஞ்சாமிர்தமும்!



'பஞ்சாமிர்தம்' என்று சொன்னாலேயே நம் நினைவுக்கு வருவது 'பழனியின் பஞ்சாமிர்தம்'தான்.

'பஞ்சாமிர்தம்' என்ற சொல்லுக்கு 'ஐய முதம்' என்று பெயர். அமுதம் என்பது நீண்ட ஆயுளை வழங்கும் தன்மை வாய்ந்தது.

அத்தகு ஐந்து வகை அமுதங்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதே பஞ்சாமிர் தமாகும். இதில் சேர்க்கப்படும் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு பகுதியிலிருந்து கிடைப்பதாகும்.




வாழைப்பழமும் நாட்டுச்சர்க்கரையும் மற்றும் கற்கண்டாகிய மூன்றும் வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகிய மருத நிலத்திலும், தேன் மலையும் மலைசார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சி நிலத்திலும், நெய் காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய முல்லை நிலத்திலும் கிடைப்ப வையாகும்.

இவற்றை விகிதாச்சார முறையில் சேர்ப்பதால் உண்டாவதே பஞ்சாமிர்த மாகும்.

இந்தப் பஞ்சாமிர்த அபிஷேகமானது எல்லாக் கோயில்களிலும் நடைபெற்றாலும் பழனியில் கிடைக்கும் பஞ்சாமிர்தத்திற்கு மட்டும் புகழ் அதிகம்.

அதற்குக் காரணம், பஞ்சாமிர்தத்தில் பயன் படுத்தப்படும் 'விருப்பாச்சி' என்ற வகை மலைப்பழம் என்றாலும், மலையின்மீது பழமாக இருக்கும் முருகனின் (நவபாஷாண சிலை) மீது பட்டு வருவதாலாகும்.



### பஞ்சாமிர்த அபிஷேகப் பலன்

மலைப்பழம், நாட்டுச் சர்க்கரை, கற்கண்டு, நெய், தேன் உள்ளிட்டவற்றை முறைப்படிக் கலந்து முறையான மந்திரம் சொல்லி, முருகனுக்கு அபிஷேகம் செய்தால், பஞ்சமா பாதங்களாகிய ஐந்து வகைக் குற்றங்களும் நீங்கி வேண்டியவற்றை அந்த வேலாயுதம் வழங்குவார்.

### முருகனின் விருப்பம்

நாட்டுச் சர்க்கரை, நறுந்தேன், பசும்பால், பழங்கள், நெய் ஆகியவற்றோடு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்யும்போது, கையில் தண்டு கொண்டு அருளும் தண்டாயுதன் அதை ஏற்றுக்கொண்டு அருள்கிறான். இதனை,

"சர்க்கரா மது கோக்ஷீர பலசார
க்ருதைர்யுதம்
பஞ்சாமிர்தம் ஸ்நாநமிதம்
பாகுலேய க்ரஹாணபோ"

– என்கிறது ஸ்ரீ சுப்ரமண்ய கல்பபூஜா விதாநம்.

### பஞ்சாமிர்த விதி;

பஞ்சகவ்யத்திற்கு (பசுவிலிருந்து கிடைக்கும் பால், தயிர், நெய், கோமியம் மற்றும் சாணத்தை விகிதாச்சார முறையில் கலப்பது) முன்னால், கிழக்குப் பகுதியில் தலைவாழை இலைபோட்டு, அதில் பச்சரிசி இட்டு, பாகம் பகிர்ந்து பிரித்து, பாத்திரங்கள் வைத்து மந்திரம் சொல்லி, நடுவில் பால், கிழக்கில் தயிர், தெற்கில் நெய், வடக்கில் தேன், மேற்கில் சர்க்கரை, அக்னி (தென்கிழக்கு) யில் வாழைப்பழம், பலாப்பழம் மற்றும் மாம்பழம் ஆகிய பழங்கள், ஈசான (வடகிழக்கு) த்தில் சந்தன நீரும், நிருதி (தென்மேற்கு) யில் பழரசங்களும், வாயு (வடமேற்கு) வில் நெய் ஆகியவற்றை வைத்து முறைப்படி பூசை செய்து தயாரிக்கப்படுவது என்று குமாரந்திரம் சொல்கிறது.

### தற்போதைய தயாரிப்பு முறை;

மலைப்பழம், நாட்டுச்சர்க்கரை, கற்கண்டு, தேன், நெய் மற்றும் ஏலக்காய் ஆகியவற்றை இயந்திரங்களின் உதவியுடன் விகிதாச்சார முறையில் கலந்து பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு முறைப்படி தயாரித்த பஞ்சாமிர்தத்தைத் தரம் சோதித்த பிறகு முருகனுக்குத் தினந்தோறும் அபிஷேகம் செய்யப்படுகிறது.

aanmeegamalar.com

aanmeegamalar.com

பழநி, தைப்பூசத் திருவிழாவிற்கு வருகைதரும் பக்தகோடி பெருமக்களை
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்....





SRI KANDA VILAS VIBUTHI STORE

SINCE 1953

பழனி

# ஸ்ரீ கந்த விலாஸ்

பக்தியின் மேன்மையை உணர்வீர்

**ஸ்பெஷல் பஞ்சாமிர்தம், ஜவ்வாது வாசனை விபூதி சிறந்தது**

34, சரவணப்பொய்கை அருகில், சன்னதி ரோடு, அடிவார பழனி

98423 42155, 98941 50101, 98941 54441

srikandavilasvib uthistores@gmail.com

Online Shopping: www.srikandavilas.com, www.palanisrikandavilas.com





நிறுவனர் O.நடராஜன்


**எங்களது புதிய கிளை:**
பழனி மலை,
மேற்கு கிரிவீதி,
வின்ஞ் ஸ்டேசன்
செல்லும் வழி,
அடிவாரம் பழனி
செல்: 63855 55944



N.பாஸ்கரன்

HOTEL VEL'S COURT
A PRIME HOTEL in PALANI
Cell: 98421 74988

SRI NATARAJAR Banquet HALL
23, Ayyampulli Road, Adivaram, Palani-624601.
Cell : +91 75024 77700



# முருகனின் பிரசித்திபெற்ற 151 கோவில்கள்



தமிழ்நாட்டில் முருகனுக்கு 500 கோயில்களுக்கு மேல் உள்ளன. பெரும்பாலான முருகன் கோயில்கள் மலைமேல் அமைந்துள்ளது. 6 படை வீட்டில் முருகன், திருப்பரங்குன்றத்தில் அமர்ந்த கோலத்திலும், மற்ற 5 படை வீட்டில் நின்ற கோலத்திலும் அருளுகிறார்.

திருச்செந்தூரில் உள்ள 4 உற்சவர்களுக்கும் தனி சன்னதி உள்ளது. தமிழகத்தின் அதிக வருமானமுள்ள கோயில் பழநி முருகனுக்கு ஆனி கேட்டையில் அன்னாபிஷேகம் நடக்கும். திருத்தணி முருகன் கோயிலில் யானை வாகனம் வெளியே பார்த்திருப்பது சிறப்பு.

6 படைவீட்டில் உள்ள முருகன் 4 திசை நோக்கிய நிலையில் உள்ளார். கடலூர் கொளஞ்சியப்பர் கோயிலில் முருகன் சுயம்பு வடிவில் உள்ளார். சின்னாளபட்டி முருகன் நான்கு முகத்துடன் உள்ளார்...

இப்படி முருகனின் சிறப்புகளை சொல்லிக் கொண்டே இருக்கலாம், அந்தவகையில் முருகப் பெருமானுக்கு தமிழகத் தில் மட்டும் பிரசித்திப் பெற்ற 151 கோவில்கள் உள்ளன, அந்த கோவில் களைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

| | |
|---|---|
| 1 | எலகம்பாளையம் பாலதண்டாயுதபாணி திருக்கோயில், கோயம்புத்தூர். |
| 2 | கோட்டுப்புள்ளாம் பாளையம் பாலதண்டாயுதபாணி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 3 | குனியமுத்தூர் பாலதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 4 | சென்னாமலை பாலமுருகன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 5 | மாதப்பூர் முத்து குமார சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 6 | சாலையூர் பழனியாண்டவர் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 7 | கோயம்புத்தூர் திருச்செந்தில் ஆண்டவர் (கச்சியப்பர் மடாலயம்) திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 8 | சின்னவேடம்பட்டி தண்டபாணிசுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 9 | ஓதிமலை குமார சுப்ரமணியர் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 10 | மருதூர் குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 11 | சொர்ணமலை குழந்தை வேலாயுதசுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 12 | குமரன் குன்று கல்யாண சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 13 | அன்னூர் வட்டமலை ஆண்டவர் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 14 | போத்தனூர் அருள் முருகன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 15 | சின்னாளப்பட்டி சதுர்முக முருகன் திருக்கோயில், திண்டுக்கல் |
| 16 | ஐவர் மலை, பழநி குழந்தை வேலப்பர் திருக்கோயில், திண்டுக்கல் |
| 17 | பூம்பாறை, கொடைக்கானல் குழந்தை வேலப்பர் திருக்கோயில், திண்டுக்கல் |
| 18 | ஊதியூர் உத்தண்ட வேலாயுதசுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 19 | ஆர். வி. நகர் தண்டாயுதபாணி திருக்கோயில், திண்டுக்கல் |
| 20 | திண்டுக்கல் தண்டாயுதபாணி திருக்கோயில், திண்டுக்கல் |
| 21 | உதயகிரி முத்து வேலாயுத சுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 22 | பவளமலை முத்துகுமார சுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 23 | பச்சைமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 24 | பச்சை மலை சண்முகநாதர் திருக்கோயில், ஈரோடு |
| 25 | எழுமாத்தூர் கனகாசல குமரன் திருக்கோயில், ஈரோடு |
| 26 | செய்யூர் கந்தசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 27 | இளையனார்வேலூர் பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 28 | தோவாளை சுப்பிரமணிய சாமி (திருமலை அமரர் பதிகாத்த நயினார்) திருக்கோயில், கன்னியாகுமரி |
| 29 | பாலமலை பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், கரூர் |
| 30 | அகரம் பாலமுருகன் திருக்கோயில், கிருஷ்ணகிரி |
| 31 | காட்டினாயனப்பள்ளி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கிருஷ்ணகிரி |
| 32 | பேரையூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மதுரை |
| 33 | ஹார்விபட்டி பாலமுருகன் திருக்கோயில், மதுரை |
| 34 | எழுமலை மாதாந்த சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மதுரை |
| 35 | கைவிளாஞ்சேரி கதிர்காம பாலதண்டாயுதபாணி திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 36 | சீர்காழி பழநியாண்டீஸ்வரர் திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 37 | திருவிடைகழி முருகன் திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 38 | கண்ணனூர் பாலசுப்பிரமணியர் திருக்கோயில், புதுக்கோட்டை |

| | |
|---|---|
| 39 | தபசுமலை பாலதண்டாயுதபாணி திருக்கோயில், புதுக்கோட்டை |
| 40 | பெருவயல் சிவ சுப்பிரமணியசுவாமி (ரணபலி முருகன்) திருக்கோயில், ராமநாதபுரம் |
| 41 | மேலக் கொடுமலூர் சுப்பிரமணியசுவாமி (குமரக்கடவுள்) திருக்கோயில், ராமநாதபுரம் |
| 42 | வட்டமலை முத்துக்குமார சுவாமி திருக்கோயில், திருப்பூர் |
| 43 | பாப்பன் குளம் ஞான தண்டாயுதபாணி திருக்கோயில், திருப்பூர் |
| 44 | சிவன்மலை, காங்கேயம் சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பூர் |
| 45 | தேவர் கண்ட நல்லூர் குமாரசாமி திருக்கோயில், திருவாரூர் |
| 46 | திருவாரூர் பழநி ஆண்டவர் திருக்கோயில், திருவாரூர் |
| 47 | குன்னூர் சிவசுப்ரமணியசுவாமி திருக்கோயில், நீலகிரி |
| 48 | கோத்தகிரி வெற்றிவேல் முருகன் திருக்கோயில், நீலகிரி |
| 49 | கிருஷ்ணாபுரம் சுப்ரமணியர் சுவாமி திருக்கோயில், விழுப்புரம் |
| 50 | வீரக்குடி கரைமேல் முருகையன்னார் திருக்கோயில், விருதுநகர்.. |
| 51 | ராமகிருஷ்ணபுரம், புது டெல்லி சுவாமிநாத சுவாமி திருக்கோயில், புதுடில்லி |
| 52 | அரியலூர் பாலசுப்ரமணியன் திருக்கோயில், அரியலூர் |
| 53 | விருத்தாசலம் வேடப்பர் திருக்கோயில், கடலூர் |
| 54 | கோலாலம்பூர் பத்துமலை முருகன் திருக்கோயில், மலேசியா |
| 55 | புத்தூர், உசிலம்பட்டி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மதுரை |
| 56 | குக்கி சுப்ரமண்யா குக்கி சுப்ரமண்யா திருக்கோயில், தட்ஷின கன்னடா |
| 57 | பரங்கிப்பேட்டை முத்துக்குமர சுவாமி திருக்கோயில், கடலூர் |
| 58 | புதுவண்டிப்பாளையம் சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கடலூர் |
| 59 | வில்லுடையான் பட்டு சிவசுப்பிரமணியசாமி திருக்கோயில், கடலூர் |
| 60 | மணவாளநல்லூர், விருத்தாசலம் கொளஞ்சியப்பர் திருக்கோயில், கடலூர் |
| 61 | சி.மானம்பட்டி வெற்றிவேல் முருகன் திருக்கோயில், கடலூர் |
| 62 | ஹரிப்பாடு ஹரிப்பாடு முருகன் திருக்கோயில், ஆலப்புழா |
| 63 | திருத்தங்கல் கருநெல்லிநாத சுவாமி திருக்கோயில், விருதுநகர் |
| 64 | காங்கேயநல்லூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், வேலூர் |
| 65 | வள்ளிமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், வேலூர் |
| 66 | ரத்தினகிரி பாலமுருகன் திருக்கோயில், வேலூர் |
| 67 | எல்க் மலை பால தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், நீலகிரி |
| 68 | மஞ்சூர் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், நீலகிரி |
| 69 | செங்கம், வில்வாரணி சுப்பிரமணியர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 70 | எண்கண் சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருவாரூர் |
| 71 | ஸ்ரீவைகுண்டம் நதிக்கரை முருகன் திருக்கோயில், தூத்துக்குடி |
| 72 | மணக்கால் சுப்ரமண்யசுவாமி திருக்கோயில், திருச்சி |
| 73 | குமாரவயலூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்சி |
| 74 | இலஞ்சி இலஞ்சிக்குமாரர் திருக்கோயில், திருநெல்வேலி |
| 75 | சிவகிரி பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருநெல்வேலி |
| 76 | பண்பொழி திருமலை முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், திருநெல்வேலி |
| 77 | தோரணமலை தோரணமலை முருகன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 78 | ஆய்க்குடி பாலசுப்பிரமணியர் திருக்கோயில், திருநெல்வேலி |
| 79 | கொழுந்துமாமலை பாலசுப்ரமணியர் திருக்கோயில், திருநெல்வேலி |
| 80 | ராமநாதபுரம் வழிவிடும் முருகன் திருக்கோயில், ராமநாதபுரம் |
| 81 | உடையாபட்டி கந்தாஸ்ரமம் திருக்கோயில், சேலம் |
| 82 | வடசென்னிமலை பாலசுப்பிரமணியர் திருக்கோயில், சேலம் |
| 83 | கஞ்சமலை பாலமுருகன் திருக்கோயில், சேலம் |
| 84 | குமரகிரி தண்டாயுதபாணி திருக்கோயில், சேலம் |
| 85 | சீலநாயக்கன்பட்டி, ஊத்து மலை பால சுப்பிரமணியர் திருக்கோயில், சேலம் |
| 86 | குன்றக்குடி சண்முகநாதர் திருக்கோயில், சிவகங்கை |
| 87 | கோவனூர் சுப்பிரமணியர் திருக்கோயில், சிவகங்கை |
| 88 | கோடாங்கிபட்டி தீர்த்த தொட்டி ஆறுமுக நயினார் திருக்கோயில், தேனி |
| 89 | சுருளிமலை சுருளிவேலப்பர் திருக்கோயில், தேனி |
| 90 | தெப்பம்பட்டி மாவூற்று வேலப்பர் திருக்கோயில், தேனி |
| 91 | வானகரம் சுவாமிநாத பாலமுருகன் திருக்கோயில், திருவள்ளூர் |
| 92 | சிறுவாபுரி, சின்னம்பேடு பாலசுப்பிரமணியர் திருக்கோயில், திருவள்ளூர் |
| 93 | ஆண்டார்குப்பம் பால சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவள்ளூர் |
| 94 | அம்மையார்குப்பம் சுப்ரமணியர் திருக்கோயில், திருவள்ளூர் |
| 95 | குண்டுக்கரை சுவாமிநாத சுவாமி திருக்கோயில், ராமநாதபுரம் |
| 96 | குமரமலை பாலதண்டாயுதபாணி திருக்கோயில், புதுக்கோட்டை |



| | |
|---|---|
| 97 | பெரம்பூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 98 | எட்டுக்குடி எட்டுக்குடி முருகன் திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 99 | நாகப்பட்டினம் குமரன் திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 100 | குருசாமிபாளையம் சிவசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், நாமக்கல் |
| 101 | அலவாய்ப்பட்டி பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் |
| 102 | பேளுக்குறிச்சி பழனியப்பர் திருக்கோயில், நாமக்கல் |
| 103 | மோகனூர் பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் |
| 104 | கபிலர்மலை பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் |
| 105 | செட்டிகுளம் தண்டாயுதபாணி திருக்கோயில், பெரம்பலூர் |
| 106 | நேதாஜி ரோடு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மதுரை |
| 107 | திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மதுரை |
| 108 | மருங்கூர் சுப்பிரமணியர் திருக்கோயில், கன்னியாகுமரி |
| 109 | குமார கோயில் குமார சுவாமி திருக்கோயில், கன்னியாகுமரி |
| 110 | வேலாயுதம்பாளையம் பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், கரூர் |
| 111 | வெண்ணெய் மலை பாலசுப்பிரமணியர் திருக்கோயில், கரூர் |
| 112 | வல்லக்கோட்டை சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 113 | குன்றத்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 114 | உத்திரமேரூர் பாலசுப்ரமணியன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 115 | திண்டல்மலை வேலாயுத சுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 116 | கதித்த மலை வெற்றி வேலாயுதசுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 117 | காஞ்சிபுரம் குமரக்கோட்டம் முருகன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 118 | சென்னிமலை சுப்ரமணியசுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 119 | கொருமடுவு பாலதண்டாயுத பாணி திருக்கோயில், ஈரோடு |
| 120 | மலையப்பப்பாளையம் முத்துவேலாயுத சுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 121 | கோபி பால தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், ஈரோடு |
| 122 | குமாரசாமி பேட்டை சிவசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், தர்மபுரி |
| 123 | திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திண்டுக்கல் |
| 124 | தாண்டிக்குடி பாலமுருகன் திருக்கோயில், திண்டுக்கல் |
| 125 | ஊதியூர் உத்தண்ட வேலாயுத சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 126 | மருதமலை சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 127 | பொள்ளாச்சி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 128 | இரும்பறை ஓதிமலையாண்டவர் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 129 | குமரன் கோட்டம் சுவாமி நாத சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 130 | அனுவாவி சுப்ரமணியர்சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 131 | கிணத்துக்கடவு முத்துமலை முருகன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 132 | வேல்கோட்டம் முருகன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 133 | சரவணம்பட்டி ரத்தினகிரி முருகன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 134 | திருப்போரூர் கந்தசுவாமி திருக்கோயில், |
| 135 | வடபழநி வடபழநி ஆண்டவர் திருக்கோயில், சென்னை |
| 136 | செஞ்சேரி வேதாயுத சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 137 | கிணத்துக்கடவு வேலாயுத சுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 138 | கந்தக்கோட்டம் கந்தசுவாமி திருக்கோயில், சென்னை |
| 139 | திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், தூத்துக்குடி |
| 140 | பழநி தண்டாயுதபாணி (குழந்தை வேலாயுதர்) திருக்கோயில், திண்டுக்கல் |
| 141 | குமரன்குன்றம் பாலசுப்பிரமணியர் திருக்கோயில், சென்னை |
| 142 | கந்தாஸ்ரமம் சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சென்னை |
| 143 | சுவாமிமலை சுவாமிநாத சுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் |
| 144 | திருத்தணி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், திருவள்ளூர் |
| 145 | மடிப்பாக்கம் கல்யாண கந்தசுவாமி திருக்கோயில், சென்னை |
| 146 | மேற்கு சைதாப்பேட்டை சிவசுப்ரமணியர் திருக்கோயில், சென்னை |
| 147 | சோலைமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மதுரை |
| 148 | பழவந்தாங்கல் திருமால் மருகன் திருக்கோயில், சென்னை |
| 149 | விராலிமலை சண்முக நாதர் திருக்கோயில், புதுக்கோட்டை |
| 150 | கழுகு மலை கழுகாசலமூர்த்தி திருக்கோயில், தூத்துக்குடி |
| 151 | கிடங்கூர் சுப்ரமணியர் திருக்கோயில், கோட்டயம். |

# பழனி மலை ஏறும் முன் வழிபாடு செய்யவேண்டிய மூன்று விநாயகர்கள்





மூன்றாம் படை வீடான திருஆவினான்குடி குழந்தை வேலனை தரிசனம் செய்து பழனி மலை அடிவாரத்தில் உள்ள மூன்று விநாயகரை மனதார வழிபாடு செய்து, சிதறு தேங்காய் உடைத்து, மேல் ஏறி பழனி முருகனை தரிசனம் செய்ய வேண்டும்.

இது பல ஆண்டுகள் பாதயாத்திரை வரும் பக்தர்கள் இன்றும் மூன்று பிள்ளையார்களை வணங்கி சென்று வருகின்றனர்.

அதன் வலது புறம் உள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் சென்று தரிசனம் செய்து பழனி மலை முருகனை காண மலை ஏறிச் சென்று வேண்டுதலை நிறைவேற்றி வாழ்வில் பழனி முருகன் அருளால் நற்பலன்களை பெற்று செல்கின்றனர்.

பக்தர்கள் முதல் கடவுளான விநாயகரை வழிபாடு செய்து அம்மை அப்பனாக உள்ள ஸ்ரீ மீனாட்சி சொக்க நாதரை தரிசனம் செய்து விட்டு காலையில் ஆண்டி கோலத்தில் உள்ள தண்டாயுதபாணி முருகனை தரிசித்து மாலை ராஜா மாறிய முருகனை தரிசனம் செய்து வாழ்வில் பல்வேறு துன்பங்களில் இருந்து விடுபட்டு பக்தர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம், ஓடு வியாபாரம் & சாமில்

சீனியப்பா குரூப்ஸ்






SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

சீனியப்பா லாட்ஜ் A/C

SAK திருமண ஹால்




172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,



9842868256







எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.

# திருப்பரங்குன்றம்

## முருகன் கோவிலாக மாறிய சிவன் கோவில்

முருகப்பெருமானின் ஆறுபடை வீடு என்பதை அனைவருக்கும் தெரிந்தது, ஆனால் அந்த ஆறு படைவீடுகளில் சற்று வித்தியாசமான படை வீடு என்றால் அது திருப்பரங்குன்றம்தான். இத்தலம் முருகனின் வெற்றி ஸ்தலமாகபோற்றப்படுகிறது. இத்தலத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளன.

திருப்பரங்குன்றம் முருகன் கோவில் சிவனுக்குள் அடக்கமாகியுள்ளது சிறப்பு. இத்தலம் அமைந்துள்ளமலை சிவ அம்சமாக திகழுவதால், முருகன் வீற்றிருக்கும் சன்ன திக்கு மேல் விமானம் கிடையாது.

முருகன் சூரனை அழித்து வெற்றியுடன் இத் தலத்தில் அமர்ந்ததால் வேலுக்கும் முருகனுக்கும் முக்கியத்துவம் தரும் வகையில், சிவ சன்னதியாக திகழ்ந்த கோவிலில் முருகனுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு நாளடைவில் முருகன் கோவிலாக வழிபடப்பட்டது.

ஆறுபடை வீடுகளில் மற்ற ஐந்து படை வீடுகளிலும் முருகன் நின்ற கோலத்தில் காட்சி யளிப்பார், ஆனால் திருப்பரங்குன்றத்தில் மட்டுமே அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார்.

சிவன் கோவிலாக திருப்பரங்குன்றம் திகழ்ந் தாலும் முருகனுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.ஆரம்பகாலத்தில் இத்தலத்தில் சிவனே பிரதான தெய்வமாக இருந்தார், முருகப்பெருமான் தென்பரங்குன்றம் குடவரையில் மட்டுமே காட்சி தந்தார்.

திருப்பரங்குன்றம் அறுபடை வீடுகளில் முதல் படை வீடு ஆகும். 247 தேவாரத் திருத்தலங்களில் ஒன்று ஆகும். நக்கீரர், அருணகிரி நாதர், பாம்பன் சுவாமிகள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோர் இத் தலத்தைப் பற்றி பாடி உள்ளனர்.

இங்கு சத்தியகிரீஸ்வரர் (சிவன்), பவளக்கனி வாய்ப் பெருமாள், கற்பகவிநாயகர், சுப்பிர மணியர், துர்க்கையம்மன் என பஞ்ச தெய் வங்களும் மூலஸ்தானத்தை ஒட்டி ஒரே குட வரையில் இருப்பது வேறு எந்த முருகன் திருக் கோவில்களிலும் காண இயலாத காட்சி ஆகும்.

திருப்பரங்குன்றத்தில் துர்க்கையம்மன் கொடி மரமும், ராஜகோபுரத்துடன் இருக்கிறாள். துர்க்கையின் சன்னதி எதிரிலேயே கொடிமரமும், கோபுரமும் இருந்து தலத்தின் சிறப்பை அதிகரிக் கின்றன. கருவறையில் துர்க்கைக்கு இடதுபுறம் கற்பக விநாயகர் அருளுகிறார்.

கையில் கரும்பு ஏந்திக்கொண்டு தாமரை மலர் மீது அமர்ந்து வித்தியாசமான கோலத்தில் காட்சி தருகிறார். இவரைச் சுற்றி பல ரிஷிகள் வணங்கியபடி இருக்கின்றனர். இதுவும் ஒரு சிறப்பு ஆகும்.

சிவபெருமானே மலை வடிவில் அருளுகிறார். திருப் பரங்குன்றம் கோயிலில் மகாமண்டபத்தின் முகப்பில் நந்தி கேஸ்வரர், அவரது மனைவி காலகண்டியுடன் இருக்கிறார்.

திருப்பரங்குன்றத்தில் பிரகாரம் கிடையாது. சிவனே மலை வடிவமாக அருளுவதாலும், கோயில் குடவறையாக இருப்பதாலும் பிரகாரம் இல்லை. மலையைச் சுற்றி கிரிவலம் மட்டுமே செல்ல முடியும். அம்பாள் ஆவுடைநாயகி தனிச் சன்னதியில் தெற்கு பார்த்தபடி இருக்கிறார்.

இங்கு தான் சூரசம்ஹரத்தின் போது சுப்பிர மணிய சுவாமி வேல் வாங்குவார். இங்கு தெய்வானையை மணம் முடித்த கோலத்தில் அருளு கிறார்.



aanmeegamalar.com

அருகில் நாரதர், இந்திரன் ஆகி யோர் உள்ளனர்.

பிரம்மா, நின்றகோலத்தில் வீணையில்லாத சரஸ்வதி, சாவித்திரி ஆகியோரும் உள்ளனர். சூரியன், சந்திரன், கீழே முருகனின் வாகன மான மயில் மற்றும் ஆடு உள்ளது. இது மற்ற தலங்களில் காணக் கிடைக்காத அபூர்வக் காட்சி ஆகும். சுப்பிரமணியரின் தரிசனம்காண்பதற்காக, தேவர்கள் மற்றும் மகரிஷிகள் வெண்ணிற மயில் வடிவில் இங்கு வசிப்பதாக ஐதீகம்.

சுப்பிரமணியர் கோயிலுக்குஎதிரே ஆதிசொக்க நாதராக அருளுகிறார். இங்கு இவர்தான் பிரதான மூர்த்தி ஆவார். விழாக்காலங்களில் இவரு க்குதான் கொடி ஏற்றப் படுகிறது. இருப்பினும் முருகனே சிவபெருமானின் வடிவம் என்பதால் அவரே வீதி உலா வருகிறார் என்பது இன்னொரு சிறப்பு ஆகும்.

மகாவிஷ்ணுவின் வாகனமாக கருடாழ்வார், அவருக்கு எதிரே வணங்கியபடி இருப்பார். ஆனால், இக்கோயிலில் மகாவிஷ்ணுவிற்கு எதிரே சிவன் இருப்பதால், கருடாழ் வார் சன்னதி இல்லை. அதற்குப் பதிலாக கருடாழ்வார், சண்முகர் மண்டபத்திலுள்ள கார்த்திகை முருகனுக்கு அருகில்வடக்கு நோக்கி இருக்கிறார். இங்கு சிவ பெருமானுக்கு எதிரே பவளக் கனிவாய்ப் பெருமாள்மகால க்ஷ்மி யுடன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். சிவனுக்கு எதிரே நந்தி இல்லை, பெருமாளுக்கு எதிரே கருடன் இல்லை. மாறாக சிவனும் பெருமாளும் எதிர் எதிரே உள்ளனர்.ஆகவே இதனை மால்விடை கோவில் என்று அழைப்பது இன்னொரு சிறப்பு.

இந்த பவளக்கனிவாய்ப் பெருமாள்தான் மதுரையில் நடைபெறும் மீனாக்ஷி திருக்கல்யா ணம் அன்று சொக்க ருக்கு தாரை வார்த்து கொடுக்கப் போவார்.

ஆரம்ப காலத்தில், திருப்பரங்குன்றம் கோயிலுக்கு பின்புறத்திலுள்ள தென்பரங் குன்றம் குடவறைக் கோ யிலே பிரதானமாக இருந் திருக்கிறது. இக்கோயில் சேதமடைந்ததால், கோயிலை மறுபக்கத்திற்கு மாற்றி முருகப் பெருமானை வடக்கு திசை நோக்கி திருப்பிஅமைத்திருக் கின்றனர். எனவே “திருப்பிய பரங்குன்றம்” என்றழைக்கப் பட்ட இவ்வூர் “திருப்பரங்குன்றம்” என்று மருவியது.

அருணகிரியார் தன் பாடல் களில் தென்பரன் குன்றுரை பெருமாளே என்று பாடுகிறார். இப்போதும்மூலவர் சிவன் தான். இவரை “சத்தியகிரீஸ்வரர்” என்று அழைக்கின்றனர்.

முருகன், தெய்வானையை திருமணம் செய்த தலம் என்பதால், முருகனுக்குமுக்கியத்துவம் தரப்பட்டு, சுப்பிர மணிய சுவாமி கோயிலாக மாறி விட்டது. ஆறு படை வீடுகளில் இங்கு மட்டுமே முருகனுக்கு அபிஷேகம் கிடை யாது. புனுகு மட்டும் சாற்றப்படுகிறது.

முருகன் குடைவரை மூர்த்தியாக இருப்பதால் இந்த ஏற்பாடு. புரட்டாசி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று முருகனிடம் உள்ள வேல், மலையிலுள்ள காசிவிஸ்வ நாதர் கோயிலுக்கு கொண்டு செல்லப்படும். அங்கு அபிஷேகம் நடக்கும். அறுபடை வீடுகளில் வேலுக்கு அபிஷேகம் நடக்கும் கோயில் இங்கு மட்டுமே ஆகும். வேலுக்கு முக் கியத்துவம் ஏன் என்றால் சூரனை ஆட்கொண்டு வெற்றி வேலுடன் முருகன் இங்கு வந்து அமர்ந்ததே ஆகும்.

சிவன், விநாயகர், முருகன் ஆகிய மூவருக்குமான வாகனங்கள் கொடிமரத்திற்கு அருகில் அமைந்துள்ளன.




# போகர் உருவாக்கிய இரண்டாவது நவபாஷான முருகன் சிலை

aanmeegamalar.com

கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்" இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம். மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.



இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலை கள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன.

1. பழனி தண்டாயுதபாணி முருகன் சிலை,
2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேய நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர் ஆவார். பழனி முருகன் சிலை யை மட்டுமின்றி இந்தப் பூம்பாறை முருகன் சிலையையும் செய்தவர் போகர்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையில் தான் நவபாஷான முருகன் சிலையை உருவாக்கினார். அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.

அக்கோவிலை இறைவனிடம்வேண்டி சிவபூதங்களால் கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீன நாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளைமீண்டும் பெற்று யானை முட்டி குகைக்குவந்து ஞான நிலையை அடையும் பிரம்மத் தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தி யின் துணை கொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்த வும் பஞ்ச பூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக்கினார். அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியிலுள்ள குழந்தை வேலப்பர் சிலையாகும்.

ஒரு சமயம், அருணகிரிநாதர் பூம்பாறை மலையில் வீற் றிருந்த குழந்தையப்பரை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கி விட்டார்.

அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரிநாதர் மீது ஏறி விளையாடிக்கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்டதாம்.

இதனை தனது ஞான திருஷ்டியால் நடந்த சம்பவத்தை கண்டு குழந்தை வேடம் வந்து தன் உயிரை காப்பாற்றியதால் குழந்தை வேலர் என்று அழைக்கப்பட்டு குழந்தை வேலப்பராக இன்றும் அருள் பாலித்து வருகிறார். அவரின் பக்கத்திலேலே அருணகிரிநாதருக்கும் சிலையுடன் கோவில் உள்ளது.





# மண்ணில் புதைந்த முருகனை காண்பித்த மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி



சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே கட்டிக்குளம் கருப்ப னேந்தல் மடம் இங்கு மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் ஜீவ ஒடுக்க கோவிலாகும். இந்த இடத்தை சுற்றி ஏராளமான வயல் வெளிகளும் நீர்நிலைகள் உள்ளது.

கருஎன்றால் உயிர் ஏந்தல்என்றால் நீர்நிலைகள் உள்ள பகுதியாகும். ஆல், அரசு, வேம்பு, வில்வம்,போன்ற உயிர் வளர்க்கும் மரங்களாகும். இந்த அணுக்கள் மூலமாகவித்திட்டு வாழ்ந்த மகான்கள் சூட்டுகோல் ராமலிங்க சுவாமி, சித்தர் செல்லப்பா சுவாமி,மகாசித்தர் மாயாண்டி சுவாமி, பிராமணத்தி அம்மாவும், சிலம்பு சுவாமி, பொன்னின் அம்மையார் போன்றவர்கள் வாழ்ந்த இடமாககருப்ப னேந்தல் மடம் இருந்து உள்ளது. நீர நிலைகள் நிறைந்தஇப்பகுதி யில் மகான்கள் வாழ்ந்து பிராண உயிர் காற்றை மண்ணில் பரப்பிய இடமா கவும் ஞானபீடமாகவும் பக்தர்களின் மனகுறைகளை அறிந்து மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சித்தர் தீர்பதாக வும் சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கமாகவும் கருப்பனேந்தல் மடம் தெய்வீக ஆற்றல் வாய்ந்த இடமாக உள்ளது.

தற்போது கருப்பனேந்தல் மடத்தில் பக்த்தர்களின் கைங் கர்யம் மூலம் புதிதாக தத்ரூபமாக வெள்ளி சூட்டுகோல் ஐம்பொன்னால் மகாசித்தர் மாயாண்டி சுவாமி சிலை பிரதிஷ்டை மற்றும் புதிய மயில் வாகனம் கருப்பனேந்தல் மடத்தில் உள்ளது.

இதேபோல் சுவாமி வணங்கி பிரதிஷ்டை செய்த விநாயகர் தண்டாயுதபாணி சன்னதிகள் கருங்கல் திருப் பணிகள் நடைபெற்று வருகிறது தினமும் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

தவத்திரு கட்டிக்குளம் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் கருப்ப னேந்தல் மடம் மடம் தவச்சி தவச் சாலையில் மதுரை வடக்குமாசி வீதி முதலாளி க.இருளப்ப கோனார் அவர்களுக்கு ஆயுள் விருத்தி செய்து காசி, இராமேஸ்வரத்தை காண்பித்து அருள்பாலித்த இடம் ஆகும்.

ராமநாதபுரம் மாவட்டம் பார்த்தி பனூருக்கும் கமுதிக்கும் இடையில் கொடுமலூர் என்ற சிற்றூர் உள்ளது. அங்கு சுவாமி கள் முள் படுக்கையில் படுத்திருந்தார். அப்போது தவக்கோலத்தில் அவ்வூர் மக்களிடம் இந்த இடத்தில் முருகன் சிலை ஒன்று மண்ணில் புதைந்து கிடக்கிறது. தோண்டி எடுத்து வழிபட வேண்டும் என்று கூறினார்.

மக்கள் அவ்விடத்தைத் தோண்ட அழகான முருகன் சிலை கிடைத்தது. அங் கோயில் கட்டி மண்ணில் புதைந்து கிடந்து முருகன் சிலையை பிரதிஷ்டை செய்து திருவிழாக்கள் நடத்தி வணங்கி வருகின்றனர். இதேபோல் சுவாமியால் ஏற்படுத்தப்பட்ட மடாலயங்களில் இஷ்ட தெய்வமாக விநாயகர் தண்டாயுதபாணி சுவாமிகளை பிரதி ஷ்டை செய்து உள்ளார். இப்போதும் சுவாமியின் பக்தர்கள் விநாயகர் முருகனை வணங்கி

பல்வேறு பணிகளில் வெற்றி பெற்று வருகின்றனர். மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள முத்தனேந்தலில் இறங்கி கட்டிக் குளம்

கருப்பனேந்தல் மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி ஜீவ ஒடுக்கத்தை வழிபாடு செய்யலாம். தினந்தோறும் நித்ய அன்னதானம் நடைபெற்றுவருகிறது. ஆலய தொடர்புக்கு 99765 19601


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்



தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை

அரசு பதிவு பெற்ற மருத்துவமனை

கிளைகள்

விருதுநகர்: பாண்டியன் நகர், பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே, விருதுநகர் - 626001

ராமநாதபுரம்: எண்.1/1008, அருள்நகர் 2வது தெரு, அருள் மருத்துவமனை பின்புறம் பாரதிநகர், ராமநாதபுரம் - 623503

சென்னை: எண்.16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், ஹஸ்தினாபுரம் மெயின்ரோடு, சம்ஜி கேட் அருகில் குரோம்பேட்டை, சென்னை - 600044

HOSPITAL Regn. No.: MADUAYU20210028270 • ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

தலைமை மருத்துவமனை

130-A பாலாஜி தெரு, அழகப்பன்நகர், மதுரை-625003, போன்:0452-2692647



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

For Appointment +91 73731 16611 Visit our website: dhanvanthri.co.in

## பெருமாள் போன்று காட்சியளிக்கும்

# சிறுவாபுரி முருகன்

## மகன்களான லவ, குசனிடம் இராமன் போரிட்ட இடமே சிறுவாபுரி

சென்னைக்கு வடமேற்கே சென்னை கொல்கத்தா நெடுஞ்சாலையில் மேற்கே பிரியும் 33வது கிலோ மீட்டரில் சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் தோரண வாயில் அமைந்துள்ளது. இங்கிருந்து 3 கி.மீ தொலைவில் சின்னம்பேடு என்று தற்போது அழைக்கும் இடத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. செங்குன்றத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் தச்சூர் கூட்டு சாலை சந்திப்பு உள்ளது. அங்கிருந்து 3 கி.மீ தொலைவு சென்றால் ஆலயத்திற்குச் செல்லும் வழியை அடையலாம். செங்குன்றத்திலிருந்து செல்ல வாகன வசதிகள் உண்டு.

நுழைவு வாயிலைக் கடந்து ஆலயத்தை நோக்கிச் செல்லும்போது இரண்டு பக்கமும் பசுமையான நிலங்களும் வாழைத் தோப்புகளும் காணும்போது கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். செல்லும் வழியில் சப்தமாதா ஆலயம், அகத்தீஸ்வரர் ஆலயம், பெருமாள் ஆலயம், விஷ்ணு துர்க்கை ஆலயம் என எண்ணற்ற ஆலயங்கள் இருக்கும் இடத்தில் வடக்குவாயு மூலையில் சிறுவாபுரி பாலசுப்பிரமணியர் கம்பீரமாக எழுந்தருளியுள்ளார்.

சிறுவாபுரி முருகன் அபிஷேகத்தின் போது பார்க்க, அவர் மாமன் பெருமாளைப் போல இருக்கிறார். ஒரு நிமிடம் உங்கள் கண்களை மூடி எதிரே சிறுவாபுரி முருகனை காண்பித்தால் ஏதோ பெருமாள் கோவிலின் கருவறைக்கு முன்னே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்றே தோன்றும். திருமலையில் ஸ்ரீனிவாசன் எப்படி நிற்கிறாரோ அதே போல இவரும் நிற்கிறார். முருகப் பெருமான் வள்ளியைத் திருமணம் செய்யச் செல்லும் வழியில் சிறுவாபுரியில் இளைப்பாறிவிட்டுச் சென்றார் என்றும் இந்த ஆலயத்தில் தங்கி அமுது உண்ட இந்திரன் மற்ற தேவர்களுக்கு வீடுபேறு கிடைக்க வேலவன் அருள் புரிந்தார் என்றும் தல வரலாறு கூறுகிறது.

திரேதா யுகத்தில் இராமர் அசுவமேத யாகம் செய்ய விருப்பம் கொண்டார். அப்போது யாகப் பசுவாக அனுப்ப வேண்டிய குதிரையை ஏவிவிட்டார். அந்தக் குதிரை வால்மீகி முனிவர் ஆசிரமத்திற்கு வர, அங்கு வளர்ந்த இராமரின் பிள்ளைகள் லவனும் குசனும் அந்தக் குதிரையைக் கட்டிப் போட்டனர். இதனை அறிந்த இராமர் உடனே லட்சுமணனை அழைத்து குதிரையை மீட்டு வரச் சொன்னார். அது முடியாமல் போகவே, இராமரே நேரில் சென்று சிறுவர்களிடம் போரிட்டு அவர்களை வென்று குதிரையை மீட்டுச் சென்றார். இராமரிடம் லவனும் குசனும் போர் செய்த இடமே சிறுவாபுரி. இது இராமாயணச் செய்தியாகும்.

அருணகிரி நாதர் நான்கு திருப்புகழ்ப் பாடல்களால் இந்த அழகு முருகனைப்பற்றிப் பாடியுள்ளார் என்றால் இந்த ஆலயம் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது என்பதை அறியலாம். முருகம்மையார் என்ற முருக பக்தர் சிறுவா புரியில் வாழ்ந்து வந்தார். இந்த அம்மையார் எப்போதும் முருகன் நாமத்தையே உச்சரித்து வந்தார். இதனைப் பொறுக்காத இவரின் கணவர் தன் மனைவி முருகம்மையாரின் கரங்களை வெட்டினார். உடனே முருகா என்று அம்மையார் முருகனை நினைத்து அழுதார். விரைவில் முருகன் அம்மையாருக்கு தரிசனம் தந்து வெட்டிய கரத்தை மீண்டும் பழையபடியே சேர்த்து வைத்தார். இந்த அற்புதம் இந்தத்







தலத்தில்தான் நடந்தது.

இதனை தவத்திரு முருகதாச சுவாமிகள் பாடல் மூலமாக எழுதியுள்ளார். இந்த ஆலய இராஜ கோபுரம் ஐந்து நிலை களுடன் கம்பீரமாக வருக வருக என்று கூறி பக்தர்களை அழைக்கிறது. உயரமான கொடி மரத்திற்கு முன்னால் மரகதப் பச்சை மயில் வீற்றிருக்கிறது. இதைப் போன்ற பச்சைமயில் அமைப்பு வேறெங்கும் காண முடியாது. இந்த ஆலயத்திலிருந்து வெளியில் வரும் வழியிலிருந்து மரத்தால் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. அந்தப் படிக்கட்டுகள் வழியாக ஏறித்தான் மூலவரை தரிசிக்க முடியும். தரிசிக்கும் வழியில் தெற்கு மூலையில் மரகதக் கல்லில் சூரியன் சந்நிதியும் கிழக்கே இராஜகணபதி மரகதக் கல்லில் காட்சி அளிக்கும் சந்நிதியும் உள்ளன.

அடுத்து அண்ணாமலையார். மரகதப் பச்சையில் சந்நிதி கொண்டுள்ளார். அடுத்து முருகன் வள்ளியுடன் திருமணக் கோலத்துடன் காட்சி தருகிறார். நீண்ட காலம்திருமணம் நடக்காதவர்கள் இந்தச் சந்நிதியில் வந்து பூஜைகளும் வழிபாடுகளும் பரிகாரங்களும் செய்தால் விரைவில் திருமணம் கைகூடி வரும். அடுத்து உண்ணாமுலை அம்மன் சந்நிதியில் அனைவரும் பிரார்த்தனை செய்யலாம். அடுத்து ஆலயத்தைச் சுற்றி வரும் வழியில் ஸ்ரீ மரகத விநாயகர் சந்நிதியும், அருகில் மகிழம்பூ மரமும் உள்ளன. ஆதிமூலவர் பாலசுப்பிரமணியர் சந்நிதியில் அர்ச்சனை செய்யப்படுகிறது.



இந்த முருகர் மிக மிக எளிமையானவர். எதிர்பார்ப்பு அற்றவர். இத்தலத்திற்கு வருபவர் கடுமையாக விரதமிருந்து பசி பட்டினியுடன் தரிசிக்க வேண்டியதில்லை. இங்கு நேரில் வரவும் வேண்டியதில்லை. திருவண்ணாமலையை நினைத் தாலே முக்தி என்பது போல, சிறுவாபுரி முருகனை நினைத்தாலே, வேண்டியது கிடைக்கும் என்பது நம்பிக்கை. புதிதாக வீடு கட்ட விரும்புபவர்கள் இங்கு வழிபாடு செய்வது சிறப்பு.

முனீஸ்வரர் சந்நிதியும் அபிஷேக மண்டபமும் உள்ளது. பைரவர், சண்டிகேஸ்வரர், ஸ்ரீவெங்கட்ராயர் ஆகியோர்க்கும் தனிச்சந்நிதிகளும் ஈசான்ய மூலையில் நவகிரகங்களும் அமைந்துள்ளன. ஆலயத்தின் பின்புறம் அன்னதானக்கூடமும் திருக்குளமும் உள்ளன.

துதிக்காதவர்களைக் கூட தடுத்தாட் கொள்பவன் தண்டபாணி. துதிப்பவர்களை விட்டுவிடுவானா? செங்கேழ் அடுத்த சின வடி வேலும் திரு முகமும் பங்கே நிரைத்த நற் பன்னிரு தோளும் பதும மலர்க் கொங்கே தரளம் சொரியும் செங்கோடைக் குமரன் என எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்து எதிர் நிற்பனே வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.





இறைபணியில் P. முருகேசன் உரிமையாளர்

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

aanmeegamalar.com

# கரூர் அருள்மிகு ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மகாகும்பாபிஷேக விழா

கரூர் மாவட்டம், மேலப்பாளையம் கிராமம், S.R.M. திருமண மண்டபம் கிழக்கில் மாருதி நகரில் அமைந்து உள்ள ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா வரும் மார்ச் 6 ந்தேதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

எங்கும் நீக்கமர நிறைந்து அருள்பாலிக்கும் இறைவன் முருகப்பெருமானின் மூன் றாம் படையாகிய பழனிஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு புதிய ஆலயமாக கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மேலப்பாளையம் கிராமம், மாருதி நகரில் அருள்மிகு சர்வ வல்லபை கணபதி. அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி, ஸ்ரீ மத் போகர் சித்தர், அருள்மிகு இடும்பன் சுவாமி, அருள்தரும் புவனநாயகி உடனாகிய அருள்மிகு புவனநாதர், அருள் மிகு காலபைரவர்.



அருள்மிகு நவகிரக சுவாமிகள் அருள்மிகு நாக கன்னிகை சுவாமிகள் அமைக்கப்பட்டு ஆலய திருப்பணிகள் சிற்ப சாஸ்த்திர முறைப்படி செவ்வனே செய்து பஞ்சவர்ணங்கள் தீட்டி சிவாகம முறைப்படி மாசி மாதம் 22ம் தேதி மார்ச் (06.03.2026) வெள்ளிக் கிழமை திரிதியை திதியும் அஸ்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 8.30 மணிக்கு மேல் 10.00 மணிக்குள் மீன லக்னத்தில் மஹா கும்பாபிஷேக விழா வேத சிவாகம திருமுறை முறைப்படி நடைபெற உள்ளது.

மார்ச் 4 ந்தேதி புதன் கிழமை காலை 7.00 மணிக்கு புலியூர் ஸ்ரீ பகவதி அம்மன் கோவிலில் லிருந்துதீர்த்தம் குடம் புறப்பாடு நிகழ்ச்சி நடைபெறுகிறது.அன்றுமாலை கணபதி ஹோமம் முதல் கால யாக பூஜைகள் தொடங்கி தொடர்ந்து வேதபாராயணங்கள், திருமுறை பாராயாணம் மஹா பூர்ணாஹுதி நடைபெறும். மகாகும்பாபிஷேக விழா முன்னிட்டு வரும் 5 ந்தேதி செவ்வாய் கிழமை மாலை 7 மணிக்கு திருமுருகவள்ளல் வாரியர் சுவாமிகள் மாணவி கலைமாமணி திருமதி தேச. மங்கையர்க்கரசி அவர்களின் ஆன்மிக சிறப்பு சொற்பொழிவு நடைபெறுகிறது.

## சிறப்பு அன்னதானம்


மார்ச் 04–ந் தேதி புதன் கிழமை மதியம், இரவு 5–ந்தேதி வியாழக்கிழமை காலை, மதியம், இரவு 06–ந் தேதி வெள் ளிக்கிழமை காலை அன்னதானம் நடைபெறுகிறது.

ஊர் பொது மக்களும் கிராம மக்களும் ஆன்மீக அன்பர்களும் முருக பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி அருள் பெற்று பதினாறு செல் வங்களையும் பெற அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் பல்லாண்டு பல்லாண்டு காலம் நலமுடன் வாழ அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

இதற்கான ஏற்பாடுகளை கரூர் ஓம் ஸ்ரீ சுந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம் சார்பில் ஸ்தாபகர் நிறுவனத்தலைவர் மடாதிபதி தவதிரு சாந்தானந்த குமர குருபர சுவாமிகள் இளையபட்டம் பிரம்ம ஸ்ரீ தவத்திரு Dr. லோகானந்த குமர குருபர சுவாமிகள் ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ் தானம் மேலப்பாளையம் சாணம் பிரட்டி கரூர் ஆலய தொடர்புக்கு 9080410861, 9095941903

உ

அருள்மிகு ஞான தண்டாயுதபாணி துணை



நாள்: வசுவாவசு வருடம் மாசி மாதம் 22ம் நாள் 08.03.2026

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மேல் 10.00 மணிக்குள்

கரூர் மாவட்டம், மேலப்பாளையம் கிராமம்,
S.R.M. திருமண மண்டபம் கிழக்கில் மாருதி நகரில் அமைந்துள்ள

# ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம்

## அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில்

# மஹா கும்பாபிஷேகம்

வேத சிவாகம திருமுறைப்படி நடைபெற உள்ளது. ஆன்மிக அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி அருள் பெற்று பதினாறு செல்வங்களையும் பெற அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் பல்லாண்டு பல்லாண்டு காலம் நலமுடன் வாழ அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கிறோம்.

மார்ச் 04-ந் தேதி புதன்கிழமை மதியம், இரவு 5-ந்தேதி வியாழக்கிழமை காலை, மதியம், இரவு 06-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை அன்னதானம் நடைபெறுகிறது.



இங்ஙனம்

**ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம்**

அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம்

726/2-A1, மாருதி நகர், 1-வது கிராஸ், SRM திருமண மண்டபம் கிழக்கில், மேலப்பாளையம், சணப்பிரட்டி, கரூர் - 639 004.

ஸ்தாபகர் & நிறுவன தலைவர். மடாதிபதி தவத்திரு.

**சாந்தானந்த குமர குருபர சுவாமிகள்**

இளையபட்டம் பிரம்ம ஸ்ரீ தவத்திரு.

**Dr. லோகானந்த குமர குருபர சுவாமிகள்**

Mobile : 9080410861, 9095941903



aanmeegamalar.com

# நட்சத்திர தோஷம் போக்கும் சுயம்பு முருகன் கோவில்

குன்றுகள் யாவும் குமரனின் குடில்கள்தான்!! அன்பர் உள்ளங்களில் உயர்ந்து விளங்குதல் போல மலைகள் மீது உயர்ந்து குடிகொண்டு உய்விக் கின்றான் தனது உத்தமத் தொண்டர்களை....!

அப்படியே அடியார்களுக்கு அருள் வழங்கும் அதி உன்னதத் திருத்தலமாகத் திகழ்கிறது நட்சத்திரக்கோவில் எனப்படும் நட்சத்திரக்குன்று. சுயம்பு லிங்கங்களைப் பல்வேறு திருத்தலங்களில் தரிசித்திருக்கலாம்.

ஏன்? வேலூர் சேண்பாக்கத்தில் சுயம்பு கணபதியைக் கூட பார்த்திருப்போம். சுயம்பு முருகனை எங்கேனும்கண்ட துண்டா? அதுவும் மலை மீது?? அப்படி சுயம்பு வேலவனை வணங்கும் பாக்கியம் இந்த நட்சத்திரகிரியில் நாம் பெற லாம்.

தென்கயிலாயம் என்று போற்றப்படும் பருவத மலை யில் போதன், போதவான், புத்திராண்டன், புருகூதன், பாண்டரங்கன், சோமன், வாமன் ஆகிய ஏழு தவசிகள் தவம் புரிந்துக் கொண்டிருந்தனர். அப்போது வாழைப்பந்தல் அமைத்து, சிவலிங்கம் பிடித்த அம்பிகை, நீர் வேண்டி கணபதியையும், கந்தனையும் அனுப்பினாள்.

கணபதி காகமாய் சென்று ஜமதக்னி முனி வரின் கமண்டலத்தைக் கவிழ்த்து, (காவிரியை உற்பத்தி செய்தது போல்..) கமண்டல நதியை உற்பத்தி செய்தார். கந்தனோ பருவதமலை மீது தனது சக்திவேலை ஏவினான். சீறிப்பாய்ந்த வேல் தவசிகள் ஏழ்வரின் உடலைக் குத்தி கிழித்தது. செந்நீராகப் பெருக்கெடுத்தது நதி. அதுவே சேய் (செய்யார்) நதியானது.

கந்தனின் புனிதமிகு வேல் குத்தியக் கார ணத்தால் ஏழ்வரும் முத்தி பெற்றனர். அவர்கள் ஏழ்வரும் அந்தணர் ஆதலால் அந்தணர் எழு வரைக் கொன்ற பாவம் பிரம்மஹத்தியாய் சூழ்ந் தது குமரனை.

இதனால் அன்னை பார்வதியின் ஆலோ சனைப்படி சேயாற்றின் வடகரையில் (காஞ்சி, கடலாடி, மாம்பாக்கம், மகாதேவமங்கலம், எலத்தூர், பூண்டி, குருவிமலை) ஏழு கரைகண்டங்களையும், தென்கரையில் (மண்டகொளத்தூர், கரைப் பூண்டி, தென்பள்ளிப்பட்டு,பழங் கோவில், நார்த்தாம் பூண்டி, தாமரைப்பாக்கம், வாசுதேவன் பட்டு) ஏழு கயிலாயங்களையும் உருவாக்கி சிவலிங்க வழிபாடு செய்து விமோசனம் அடைந்தார்.

அப்போது தேவர்கள் வந்து வழிபடும் தேவனாம்பட்டு தேவகிரியிலும், நட்சத்திரங்கள் வந்து வழிபடும் நட்சத் திரகிரியிலும் முருகன் இளைப்பாறினார். அதோடு தனது அன்பர்களுக்கு அருள் வழங்கும் தலமாகவும் ஆக்கிக் கொண்டான். நட்சத்திரகிரியில் கந்தன்குடி கொண்ட சுவாரசியமான வரலாற்றினைத்தெரிந்து கொள்வோம்.!

முன்னொரு சமயம் இப்பகுதியில் இரண்டு சிவாச் சாரியார்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் ஆடி கிருத்திகை நாளில்திருத்தணிகை சென்று ஸ்ரீ சுப்பிரமணி யரை வழிபட்டு வந்தனர். ஒரு வருடம் அவர்களால் ஆடி கிருத்திகையன்று தணிகைமலை செல்ல இயல வில்லை. இதனால் இருவரும் மிகுந்த மனவருத்தம் அடைந்தனர்.


இவர்களின் கனவில் தோன்றிய குமரன், நான் நட்சத் திரகரி என்னும் குன்றின் நடுமலையில் சுயம்பு வடிவாய் எழுந்துள்ளேன்.

சூரியன் சந்திரன் உள்ளவரை 27 நட்சத் திரங்களும், நாகமும் நித்தம் என்னை பூஜிக்கும். நட்சத் திர குன்றின் அடிவாரத்தில் அமைந்திருக்கும் சந்திர புஷ் கரணி சுனையில் இருந்து நாகம் உங்களுக்கு வழிகாட்ட என்னை வந்தடை யுங்கள் எனக் கூறி மறைந்தார்.

திடுக்கிட்டு கண் விழித்த சிவாச் சாரியார்கள் விடியற்காலை பிரம்ம முகூர்த்த வேளையில் சுனையை அடைந்து, ஒளி பொருந்திய நாகம் ஒன்று வழிகாட்டிட, குன்றின் நடுவில் ஓரிடத்தில் சென்று மறைந்தது. அங்கே சப்பாத்திக்கள்ளி செடிகளுக்கு இடையே சுயம்புலிங்க வடிவாய் முருகன் காட்சியளித்தார்.

இதை கேள்வியுற்ற ஊர் மக்கள் ஒன்று கூடி, சுயம்பு சுப்பிரமணியரை வணங்கினர். பின்னர், வள்ளி தெய்வானை உடனான முருகன் உருவச் சிலையும் ஸ்தாபித்து, ஆல யமும் எழுப்பப்பட்டது. அற்புதப் பூஜைகளும் நடத்தப்பட்டது.

சேயாற்றின் கரையோரமாக சிறு குன்றின் மீது குறைகளையெல்லாம்களை யும் குமரன் இனிதே வீற்ற ருள்கின்றார்.





aanmeegamalar.com



சுமார் 60 படிகள் ஏறி, முதலில் ஸ்ரீ சித்தி விநாயகரை வணங்குகின்றோம். மூன்று நிலை இராஜகோபுரம்எழுப்பப் பட்டுள்ளது. இடப்புறம் மேற்கே வள்ளி தெய்வானையுடனான சுப்பிர மணியர் உற்சவர் சிலையும், வலப்புறம் ஸ்ரீ காசி விசாலாட்சி உடனுறை ஸ்ரீ காசி விஸ்வநாதர் சன்னதியும் உள்ளன. கிழக்குப்புறம் பலிபீடம், மயில்வாகனம், கொடிமரம் காணப்படுகின்றன. மகா மண்டபம், அர்த்தமண்டபம், கருவறை ஆகிய அமைப்பில் சன்னதிகள் அமைந்துள்ளன.

கருவறையுள் ஜோதிமயமாய் வள்ளி மற்றும் தெய்வானை யுடன் கந்தன் உருவாய் எழுந்தருள, கீழே சுயம்புவாய் லிங்க வடிவில் பூமியிலிருந்து தானாக எழுந்து பேரொளி வீசுகின்றார்.

நாகம் இங்கே தலைக்கு பின்னே பட மெடுத்து நிற்பதைக் காண மெய் சிலிர்க்கின்றது. இந்த முருகனை நாகம் அடையாளம் காட்டியதன் நினைவாக நித்தமும் நாகபாசம் பொருத்தப்படுகின்றது.

திருவாசியும், கிரீட குண்டலங் களும் கந்தனை அலங் கரிக்க, கண்கொள்ளாக் காட்சியாய் இருக் கிறது இந்த சுயம்பு சுப்பிரமணியர் தரிசனம். வேண்டியதையெல்லாம் தருவான் இந்த வேல வன். 27 நட்சத்திரங்களும், கார்த் திகைப் பெண்களும் அனுதினமும் இங்கு ஆறுமுகனைப் பூஜிப்பதாக ஐதீகம்.

மலைக்கோவிலின் வெளியே மலேசிய பத்துமலை முருகனை நினைவுகூறும் விதத்தில் கம்பீரமாய் திகழ்கின் றான் கந்தன் தங்க நிறத்தில்..!

மலையிலிருந்து காணும் அற்புதமான இயற்கை எழில் காட்சி மனதைத் தூய்மைப்படுத்தி, சுத்திகரிக்கின்றது. வீசும் தென்றலோ விவேகம் அளிக்கின்றது. மலைக்குவாக னங்கள் மூலம் செல்ல பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. அடி வாரத்தில் தீர்த்த சுனையும், அனுமன், கணபதி, நவகிர கங்கள் மற்றும் இடும்பன் சன்னதிகளும் அமைந்துள்ளன.

இந்த நட்சத்திரக்குன்று மீது வண்ணச்சரபம் தண் டபாணி சுவாமிகள் நான்கு பாடல்களைப் பாடிச் சிறப் பித்துள்ளார்.

மேலும் இந்த முருகன் மீது ஸ்ரீ சிவசுப்ரமணிய மாலை, நட்சத்திரக் குன்ற வழிநடைப்பதம், உடுமலைப் பாமாலை (உடு = நட்சத்திரம்) நட்சத்திரக்குன்று அருள்மிகு சிவசுப்பிர மணியர் பிள்ளைத்தமிழ் போன்ற எண்ணற்ற பாமாலைகள் புலவர் பலரால் இயற்றப்பட்டுள்ளது.

சித்திரை வருடப்பிறப்பு பால்குட அபிஷேகம், ஆடி கிருத்திகை பெருவிழா, கந்தர் சஷ்டி விழா, கார்த்திகை தீபம், தை கிருத்திகை, பங்குனி உத்திர பிரம்மோற்சவம் (அதில் ஏழாம் நாள் திருத்தேர்), வைகாசி விசாகம், மாத கிருத்திகைகள் என விழாக்கள் பற்பல..

சஷ்டியில் முருகப்பெருமான் எலத்தூர் சென்று அன்னை சக்தியிடம் வேல் வாங்கி வந்து, நட்சத்திரக்கோவிலில் சூரசம்ஹாரம் செய்வார்.

அதன்பின் சேயாற்றங்கரையில் அமைந்துள்ள குருவி மலை கிராமத்திற்கு சென்று, அங்கே ஆற்றில் தீர்த்தவாரி நடக்கும். இவ்விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

கிருத்திகைகளில் தேன் அபிஷேகம் செய்து, சம்பா சாதம் படைத்து, செவ்வரளி மாலை சாற்றி, அன்னதானம் செய்து வழிபடுபவர்களின் நாகதோஷம், புத்திர தோஷம் மற்றும் திருமண தோஷங்கள் அகலும். புது வாழ்வு பிறக்கும்.

பாலபிஷேகம் செய்து, சிவந்த வெட்சி புஷ்பங்களால் அர்ச்சித்து, மாதுளைக் கனி படைத்து, வழிபடுவோரின் நட்சத்திர தோஷங்கள் யாவும் விலகி, நல்லருள் கட்டும்.

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் தாலுகாவில் அமைந்துள்ளது இத்தலம். திருவண்ணாமலை மாவட்டம் போளூரிலிருந்து செங்கம் செல்லும் பேருந்து சாலையில் சுமார் 8 கிலோமீட்டர் தொலைவில்அமைந்துள்ளது நட்சத் திரக்குன்று எனப்படும் நட்சத்திரக்கோவில்!!


வாழ்க வளமுடன்

தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்



க.சுப்பிரமணியன்

பத்திர எழுத்தர்



செல்:

9443170771

9043170771

மு.முகிலன் பத்திர எழுத்தர்


செல்: 9944834834, 7373595259,

1, வெள்ளாளர் தெரு, மெயின்ரோடு, நெல்முடிக்கடை திருப்புவனம்

# வடபழனி முருகன் கோவிலை உருவாக்கிய சித்தர்கள்

aanmeegamalar.com

கலியுக வரதனான வடபழனி ஆண்டவர் திருக்கோவில் சென்னையில் உள்ள வடபழனியில் அமைந்துள்ளது. திருமணத்தடை விலகவும், குழந்தைப்பேறு பெறவும் இத்தலத்து முருகனை வழிபடுகின்றனர். இவரை வழிபட குடும்பத்தில் ஐஸ்வர்யம் பெருகும், வியாபாரம் விருத்தி அடையும் என்பது நம்பிக்கை. தென்பழனிக்கு செல்ல முடியாதவர்கள் வடபழனிக்கு வந்து தங்கள் குறைகளை சொல்லியும், நேர்த்தி கடன்களை நிறைவேற்றியும் செல்கின்றனர்.



இத்தலத்தில் பாத ரட்சையுடன் (காலணிகள்) முருகன் அருள்பாலிப்பது தனி சிறப்பாகும். செவ்வாய்க்கென்று அங்காரகன் சன்னதி இத்தலத்தில் தனி சன்னதியாக இருப்பது கூடுதல் சிறப்பாகும். பழனிக்கு செல்ல முடியாத பக்தர்கள் இத்தலத்து ஆண்டவரை வழிபடுகின்றனர். முருகப்பெருமான் தாமரை பீடத்தின் மீது இருப்பது போன்றும், வலது பாதத்தை முன்வைத் திருப்பது போன்றும் அமைந்துள்ளது. இங்கு தினமும் தங்கத்தேர் இழுக்கப்படுகிறது. ராஜகோபுரம் 72 அடி உயரத்தில் அமைந்துள்ளது. சாதுக்கள் பிரதிஷ்டை செய்த தலமாதலால் இத்தலத்து இறைவனை வணங்குவது மிகவும் சிறப்பு.




இக்கோவிலில் பல தெய்வங்களுக்கு தனி சன்னதிகள் உள்ளன. வரசித்தி விநாயகர், சொக்கநாதர், மீனாட்சி அம்மன், காளி, பைரவர், மகாலட்சுமி, வள்ளி தேவசேனா சமேத சண்முகர் சந்நிதிகளும் உள்ளன. இக்கோவிலின் முன்புற ராஜ கோபுரத்தில், கந்தபுராண காட்சிகள் வண்ணமயமாக விளக்கப்பட்டுள்ளன.

இங்கு முக்கியமான நேர்த்திக்கடன் முடி காணிக்கையாகும். அத்துடன் வேல் காணிக்கையும் செலுத்தப்படுகிறது.

1890 ஆம் ஆண்டு எளிய ஓலை கூரை கொட்டகையுடன் இக்கோவில் கட்டப்பட்டது. இக்கோவிலின் தலபுராணத்தில் முருக பக்தரான அண்ணாசாமி நாயக்கர் என்பவர் முதலில் இருந்த கொட்டகையை அவரின் சொந்த வழிபாட்டிற்காக அமைத்தார் என்றும், அங்கு தென்பழனி முருகனின் வண்ணப் படத்தை வைத்து வழிபட்டார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் ஒரு சமயம் தீவிர வயிற்று வலியால் அவதிப்பட, அந்நோய் தீருவதற்கு அவர் தவறாமல் திருத்தணி மற்றும் திருப்போரூர் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வந்தார். பின்பு தென்பழனி யாத்திரையின் போது ஒரு சாது சொல்லியதற்கு இணங்க தான் தங்கி இருந்த கொட்டகையில் பழனி முருகனின் உருவப்படத்தை வைத்து வழிபட ஆரம்பித்தார்.

தன்னுடைய நாக்கை அறுத்து முருகனுக்கு காணிக்கை செலுத்தினார். இதற்கு 'பாவாடம்' என்று பெயர். பாவாடம் காணிக்கையால் அவருடைய வயிற்று வலி நீங்கியது. அண்ணாசாமி தம்பிரானுக்கு தனி சன்னதி, கோவிலில் நுழையும் பொழுதே வலப்புறத்தில் உள்ளது.

அவருக்குப் பின் அவருடைய சீடரான ரத்தினசாமி செட்டியார் என்பவரால் 1865 ஆம் ஆண்டு தென்பழனியில் உள்ளது போல சிலை செய்து கோவில் கட்டப்பட்டது. இவரும் அண்ணாசாமி தம்பிரான் போல 'பாவாடம்' தரித்து, குறி சொல்லும் ஆற்றலைப் பெற்றார். ரத்தினசாமி தம்பிரானின் சீடரான பாக்கியலிங்கத் தம்பிரான்காலத்தில் கர்ப்பக்கிரகம், உட்பிரகாரம் மற்றும் கருங்கல் மண்டபம் போன்றவை கட்டப்பட்டன.

இந்த மூன்று தம்பிரான்களின் சமாதியும் நெற்குன்றம் போகும் வழியில்

அமைந்துள்ளது. இந்த மூன்று சித்தர்களுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டு பௌர்ணமி பூஜை மற்றும் குருபூஜை போன்றவை சிறப்பாக நடைபெறுகிறது.

வடபழனி முருகன் கோவில் வேண்டிக்கொண்டால் திருமண தடை நீங்குவதாக கருதப்படுகிறது, திருமணம் தடை நீங்க வேண்டுமானால் வடபழனி முருகன் கோவிலுக்கு தான் செல்ல வேண்டும். வடபழனி கோயிலில் ஒரு வருடத்தில் சுமார் 7000 திருமணங்கள் நடைபெறுகின்றன. சென்னை மாநகரில் மிகவும் பிரசித்தி பெற்ற இக்கோயிலில் உள்ள முருகன், பாதணிகளுடன் காட்சிதருவது நவீனத்துவத்தின் அடையாளமாக கருதப்படுகிறத.

மேலும் அவரது இடது பாதம் ஒரு படி முன்னால் காணப்படுவது தனித்தன்மை வாய்ந்தது. பக்தர்களின் துயரைத் துடைக்க எந்நேரமும் கிளம்பத் தயாராக இருப்பது போன்ற தோற்றமாகவே பார்க்கப்படுகிறது.

இங்கிருக்கும் முருகப்பெருமான் திருமணத்திற்கு மட்டுமின்றி குழந்தை பேறுக்கும் அருள்பாலிக்கிறார் என்று பக்தர்கள் மரத்தில் தொட்டில் கட்டுகிறார்கள். கோயிலில் நான்கு ராஜகோபுரங்கள் உள்ளன. கோயிலின் கிழக்கு கோபுரத்தில் 108 பரதநாட்டிய நடனத்தையும் காணலாம்.

கோவிலின் நுழைவு வாயிலுக்கு அருகில் பெருமாள் கோவில் அமைந்திருப்பது சிறப்பு. மாமன் மருமகன் ஒரே இடத்தில் இருந்தாலும், பெருமாள் கோவில் மிகவும் பழமைவாய்ந்த கோவிலாக திகழ்கிறது.

வடபழனி முருகன் கோவிலில் தமிழ் மாதம் 12–லும் விழாக்கள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகத் திருவிழா




11 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதத்தில் 6 நாட்கள் கந்த சஷ்டி விழா சூரசம்காரத்துடன் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. 6 நாட்களும் முருகப்பெருமானுக்கு லட்சார்ச்சனை நடைபெறுகிறது.

கோவிலை உருவாக்கிய சித்தர்களுக்கு கோவிலுக்கு இரண்டு தெருக்கள் தள்ளி (நெற்குன்றம் போகும் வழி யில்) சித்தர் கோவில் அமைந்துள்ளது. முருகனுக்குரிய தினங் களில் இங்கு உள்ள சித்தர்களுக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது.

கோவில் காலை 5 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் திறந் திருக்கும்.




உ
ஐஸ்வர்யா ஜாதகாலயா
AISHWARYAA JATHAKALLAYA
கல்வியில் சிறந்து விளங்க, நல்ல வேலை தொழில் அமைய (உள்நாடு மற்றும் வெளிநாடு), திருமண பாக்கியம் பெற, குழந்தை பாக்கியம் பெற, நீதிமன்ற வழக்குகள் சாதகமாக முடிய, நிலம், வீடு, வாகன யோகம் பெற, கடன் நிவர்த்தி பெற, தொழில் விருத்தி பெற, உடல் ஆரோக்கியம், ஆயுள் பலம் பெற, சர்வரோக நிவாரணியாக ஜோதிட அடிப்படையிலும், வாஸ்து முறைப்படியும், பரிஹார பூஜைகள் மூலம், சகல சௌபாக்கியம் பெற எந்திர, தந்திர, மந்திர, யக்ன, பிரயோகம் மூலம் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும்.
அடிப்படை ஜாதகம், பலன் | முழுநீள ஜாதகம், பலன் | பிறந்தநாள் வருடப்பலன் | திருமண ஜாதகப் பொருத்தம்
முகூர்த்த தேதி மற்றும் நேரம் | அதிஷ்டப் பெயர் சூட்டுதல் | வாஸ்து | அதிஷ்டம் தரும் கற்கள் | எண் கணிதப் பலன்
TAMIL, ENGLISH, HINDI, TELUGU, KANNADA, MALAYALAM AND MORE LANGUAGES | Also Provides Astrological Services "Anywhere in the World" You Can Contact:
ஐஸ்வர்யா ஜாதகாலயா திருமண தகவல் மையம் (அனைத்து ஜாதி, மதம்)
கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்
K.S.Ravindhran, Vedic Astrologer
#55, கவரை தெரு, மேற்கு மாம்பலம் (A.M.R கல்யாண மண்டபம் அருகில்), சென்னை-33.
#55, Kavarai Street, (Near: A.M.R Kalyana Mandapam) West Mambalam, Chennai-33.
98841 41870 | 98841 47630
WebSite: www.aishwaryajathakalaya.com | Our Youtube: aishwaryajathakalaya



மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

**184 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன**

1.2.2026 சிறப்பிதழ்




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622 / 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# பிரணவ மந்திரத்தை மறந்த சிவன் மந்திரத்தை உபதேசித்த முருகப்பெருமான்

# சுவாமிமலை ரகசியம்

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் 4வதாக திகழ்வது சுவாமிமலை.

சுவாமிமலையை புராணங்களும் இலக்கியங்களும் திருவேரகம் என்று குறிப்பிடு கின்றன. "ஏர்" என்றால் அழகு; "அகம்" என்றால் வீடு என்பர். அழகு மிக்கபடைவீடு ஆதலால் இதற்கு திருவேரகம் (திரு+ ஏர் + அகம்) என்று பெயர் வந்ததாம். ஏர்த் தொழிலான விவசாயம் சிறக்கும் பகுதியில் உள்ள படைவீடு ஆதலால் திருவேரகம் ஆனது என்பாரும் உண்டு. அடியவர்களின் மனதை "அருள்" எனும் ஏர் கொண்டு உழுது, "அன்பு" எனும் பயிரை வளர்ப்பவர் முருகப் பெருமான். இவர் அருள் பாலிக்கும் தலம் ஆதலால் இந்தப் பெயர் வந்தது என்றும் கூறுவார்கள்.

தவிர... சிரகிரி, சிவகிரி, முருகப் பெருமான் இங்கு குரு அம்சமாக அருள் பாலிப்பதால் குருமலை, குரு கிரி, ஸ்வாமிநாத ஸ்வாமியின் கோயில் கட்டுமலை அமைப்புடன் அழகுற காட்சி தருவதால் சுந்தராசலம், நெல்லி (தாத்ரி) மரத்தைத் தல மரமாகப் பெற்றதால் தாத்ரிகிரி ஆகிய பெயர்களும் இந்தத் தலத்துக்கு வழங்கப்படுகிறது.

முருகப் பெருமான், குரு அம்சமாகத் திகழும் இரண்டு தலங்களில் ஒன்று சுவாமிமலை. மற்றொன்று திருச்செந்தூர்.

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளும் ஆறு ஆதார மையங்களைக் குறிப் பன என்பர். அதாவது,

திருப்பரங்குன்றம் மூலாதாரம்; திருச்செந்தூர் சுவாதிஷ்டானம்,

திருவாவினன்குடி (பழநி) மணிபூரகம், திருத்தணி விசுத்தி,

பழமுதிர்ச்சோலை ஆக்ஞை. இந்த வரிசையில் சுவாமிமலை அனாகதம் என்பர்.

சுவாமிநாத ஸ்வாமி திருக்கோயிலின் தல புராணம்:

'படைப்புக்கு தானே காரண கர்த்தா!' என்ற கர்வத்துடன் திரிந்தார் பிரம்மன். ஒரு முறை அவர், திருக்கயிலைக்கு வந்தார். அங்கிருந்த முருகப் பெருமானை, ஆணவம்மிகுந்த பிரம்மன் கவனிக்காது சென்றார்.



aanmeegamalar.com

உடனே பிரம்மனை அழைத்த முருகப் பெருமான், பிரணவத்தின் பொருளைக் கூறுமாறு பிரம்மனிடம் கேட்டார். பொருள் தெரியாத பிரம்மன் திகைக்க... அவருடைய தலையில் குட்டி சிறையில் அடைத்தார் முருகன். அத்துடன் படைப்புத் தொழிலையும் தானே ஏற்றார். இறுதியில் சிவபெருமான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பிரம்மனை விடுவித்ததுடன் தந்தைக்கும் பிரவணப் பொருளை உபதேசித்தார்.



முருகப் பெருமானின் உபதேசத்தைக் கேட்ட சிவனார், தம் உள்ளத்தில் உவகை பொங்கிட... தன் மகனை 'நீயே சுவாமி!' என்று கூறினாராம். இதனால் இந்தத் தலம் சுவாமிமலை எனும் பெயர் பெற்றது. முருகப் பெருமான் ஸ்வாமிநாத ஸ்வாமி மற்றும் தகப்பன் ஸ்வாமி ஆகிய திருநாமங்களுடன் இங்கு கோயில் கொண்டார்.

ஒரு முறை 'பிருகு' மகரிஷி தீவிர தவத்தில் ஆழ்ந்தார். தனது தவத்துக்குத் தடை ஏற்படுத்துபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தம் சிறப்பை இழப்பார்கள் என்று ஆணையிட்டிருந்தார்.

அவரது தவ வலிமையால் அகில உலகமும் தகித்தது. தேவர்கள் அனைவரும் சிவனாரை வேண்ட... அவர் பிருகு முனிவரின் தலையில் கை வைத்து தகிப்பை கட்டுப்படுத்தினார். இதனால் தவம் கலைந்தது. முனிவரது ஆணைப்படி சிவனார் பிரணவ மந்திரத்தை மறந்தார்.

இதன் பிறகு, பிரம்மனுடன் முருகப் பெருமான் நிகழ்த்திய அருளாடலின்போது, அவரிடமே பிரணவப் பொருள் உபதேசம் பெற்றார் ஈசன். உலக நன்மைக்காக பிரணவ மந்திரத்தை மறக்கும் அளவிற்கு முனிவரின் சாபத்தை பெற்ற ஈசனுக்கு அவரது மகன் முருகன் வாயிலாக தந்தைக்கு பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்ததின் இரகசியம் இதுவே.

இந்தப் பெருமை சுவாமிமலை திருத்தலத்தையே சாரும். தந்தைக்கு வலக் காதில் பிரணவப் பொருள் உப தேசித்த வேலவன், தன் தாயாகிய பராசக்தியும் அதன் அர்த்தத்தை அறிய வேண்டும் என்பதற்காக சிவனாரின் இடக் காதிலும் உபதேசம் செய்தார் என்கிறது புராணம்.

இந்தத் தலத்தின் தல விருட்சம் நெல்லி மரம். இதன் பின்னணியை சுவாரஸ்யமாக விளக்குகிறது தல புராணம். 'சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து தீப்பொறிகளாக அவதரித்த ஆறுமுகன் தன் மடியில் தவழாமல் பூமாதேவியின் மடியில் (சரவணக் காட்டில்) தவழ நேர்ந்ததே!' என்று கோபம் கொண்ட பார்வதிதேவி, பூமா தேவியை சபித்து விட்டாள். சாப விமோசனம் தேடி அலைந்த பூமாதேவி, இறுதியில் சுவாமிமலை தலத்தை அடைந்து, சுவாமிநாத சுவாமியை வழிபட்டு நலம் பெற்றாள். பிறகு, இங்கிருந்து பிரிய மனமின்றி நெல்லி (தாத்ரி) மரமாகி நின்று, இன்றும் தன் வழிபாட்டைத் தொடர்கிறாள் என்கிறது தல புராணம்.

தல விருட்சத்துக்கு மட்டுமின்றி இங்குள்ள தீர்த்தங்களுக்கும் தனித் தனி சிறப் புகள் உண்டு.

வஜ்ர தீர்த்தம்: கீழக் கோயிலான மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் கிணறாகக் காணப்படுகிறது இந்தத் தீர்த்தம். இதில் இருந்தே ஸ்வாமி அபிஷேகத்துக்கு நீர் எடுக்கிறார்கள். இதை சுவாமி கூபம், க்ஷேத்திர கூபம் என்றும் அழைப்பர். இந்த நீரை தெளித்துக் கொண்டால் எல்லா வித நோய்களும் பிரம்மஹத்தி தோஷமும் அகலும்;

குமாரதாரை: இங்கு பாயும் காவிரியின் கிளை நதியையே குமாரதாரை என்பர். எல்லோரும் தன்னிடம் வந்து பாவத்தைக் கழுவிச் செல்ல... அதை, தான் எங்கு போய் போக்குவது என்று கலங்கிய கங்காதேவி, ஈசன் அறிவுரைப்படி இங்கு வந்து, காவிரியுடன் கலந்து குமாரக் கடவுளை வழிபட்டு புனிதம் பெற்றாளாம். இப்படி கங்கை, தாரையாக (நீர்ப் பெருக்காக) வந்து காவிரியில் கலந்ததால், இங்குள்ள காவிரிக்கு குமாரதாரை என்று பெயர்.

சரவண தீர்த்தம்: திருக்கோயிலின் வடகிழக்கில் உள்ள தீர்த்தம். ஜமதக்னி முனிவரது சாபத்தால் கரடி உருப் பெற்ற தன் தந்தை உய்வடையும் பொருட்டு... சரவணன் என்ற சிறுவனால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தம் இது. அவன் தந்தை இதில் நீராடி, ஸ்வாமி நாதரை வழிபட்டு சுயரூபம் பெற்றாராம்.

நேத்திர தீர்த்தம் (சுவாமி தீர்த்தம்): இது, திருக்கோயிலின் கிழக்கே உள்ளது. கந்தவேளின் வேலாயுதத்தால் உருவாக்கப்பட்டது. இதன் மகிமையை 'சப்த ரிஷி வாக்கியம்' என்ற சோதிட நூல் விவரிக்கிறது.




நல்லதே
நடக்கும்
ஆன்மிகமலர்


சேலஞ்ச்
சுத்தத்தின்
வாசனை
Challenge
LIQUID DETERGENT
2Ltr
MONEY SAVER PACK
Win
Challenge MATIC
DETERGENT CAKE
Doo Doo
Trade Enquiry : 72003 01382





aanmeegamalar.com

UG COURSES
+Automobile Engineering
+Bio-Medical Engineering
+Civil Engineering
+Computer Science Engineering
+Electronics & Communication Engineering
+Elecrical & Electronics Engineering
+Artificial Intelligence & Data Science
+Information Technology
+Marine Engineering
+Mechanical Engineering

PG COURSES
+Bio-Medical Engineering
+Biometrics & Cyber Security
+Communication System
+Construction Engineering & Management
+Computer Science & Engineering
+Embedded System Technologics
+Energy Engineering
+SoftwareEngineering
+MBA

GKM
COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY
Pioneer in Engineering education with state of the art infrastructure.
PERUNGALATHUR



GKM COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY
GKM INSTITUTE OF MARINE SCIENCES & TECHNOLOGY
GKM VIDYASHRAM
GKM POLYTECHNIC COLLEGE
GKM COLLEGE OF PHYSICAL EDUCATION

G.K.M. Nagar, Perungalathur (Near Tambaram), Chennai - 600 063. Tamil Nadu, India. Phone: +91 - 44 - 2279 2411. www.gkmgroup.in Toll Free: 1800 599 0333

# பெருமாளுக்கு உதவி செய்த மருமகன் யானை வாகனம் கொண்ட முருகன்



கயிலாய மலைக்கு ஈடாக கருதப்படும் மலை திருத்தணி மலை. என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாடி இருக்கிறார். முருகப்பெருமானுக்கு உரிய திருவுருவங்கள் 16. அதில் ஞானத்தை அருளும் ஞானசக்திதரனாக திருத்தணியில் வீற்றிருக்கிறார். சாந்தமான முகத்துடன், இடதுகையைத் தொடையில் வைத்து, வலது கையில் வேல் தாங்கி காட்சி தருகிறார்.

தாரகாசுரனிடம் போர்புரிந்து சக்ராயுதத்தை இழந்த திருமால், மீண்டும் தன் சக்ராயுதத்தை பெற்றுத் தந்த பெருமை கொண்டவர் இம்முருகனே. முருகப்பெருமானுக்குரிய வாகனமாக எங்கும் மயில் இருக்க, இங்கு யானை வாகனமாக அமைந்துள்ளது. லட்சுமியின் அம்சமான இந்த யானையுடன் கூடிய முருகனை வழிபடுவோருக்கு தேவர்களுக்கு நிகரான செல்வவளம் உண்டாகும் என்பது ஐதீகம். இதன் காரணமாகத்தான் புதுவருடப் பிறப்பின் போது இந்தத் தலத்தில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

இங்குள்ள இந்திரச்சுனை நீரால் முருகப்பெருமானுக்கு தினமும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதில் பக்தர்கள் நீராட முடியாது. மார்கழி திருவாதிரை நாளில் முருகனுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுவது சிறப்பு. குளிர்காலம் என்பதால் முருகன் மீது கொண்ட அன்பு கருதி இவ்வாறு செய்கின்றனர்.

# சனிதோஷத்தை கட்டுப்படுத்தும் முருகஸ்தலம்



தேனி மாவட்டத்தில் உள்ள சுருளிமலையில் 'கைலாசப்புடவு' என்னும் குகை உள்ளது. இக்குகையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் சனிதோஷத்தை நிவர்த்தி செய்யும் வல்லமை பெற்றவராக விளங்குகிறார்.

இங்கு, சுருளிதீர்த்தம் என்னும் அருவியும் விழுகிறது. காட்டு மூலிகைகளில் பட்டு வரும் இந்த நீர் நோய்தீர்க்கும் மருந்தாக விளங்குகிறது. சனீஸ்வரரின் உக்ரபார்வையால் அவதியுற்ற தேவர்கள் சுருளிமலை முருகனிடம் தஞ்சம் புகுந் தனர்.

முருகப்பெருமான், தன் அருள்பார்வையால் சனீஸ்வரரின் பார்வை பலத்தைக் குறைத்து நற்பலன் அளித்தார்.

சனி தோஷத்தால் துன்பப்படுபவர்கள் சுருளி நாதரான முருகனை வழிபட்டால், துன்பம் நீங்கப்பெறுவர் என்பது ஐதீகம்.

# ராமநாதபுரத்தில் பாம்பன் சுவாமிக்கு காட்சி கொடுத்த முருகப்பெருமான்



தவத்திரு பாம்பன் சுவாமிக்கு ராமநாதபுரம் பிரப்பன் வலசையில் காட்சி கொடுத்த இடத்தில் உள்ளது அருள்மிகு ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் கோவில் இங்கு ஆண்டு தோறும் தைப் பூசம் பங்குனி உத்திரம் திருக்கார்த்திகை மற்றும் மாதந்தோறும் வரும் கார்த்திகை ஷஷ்டி நாட்களில் நடைபெறும் பூஜைகள் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

முருக பக்தர்கள் நேரில் வந்து இங்கு தரிசனம் செய்பவர்களுக்கு அவர்களுக்கு முருகப்பெருமான் ஆசி பெற்று காட்சி அளித்த பிரப்பன் வலசையில் தவத்திரு பாம்பன் சுவாமிகள் பக்தர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக பக்தர்களால் நம்பப்படுகிறது. ஆண்டு தவத்திரு பாம்பன் சுவாமிகள் குருபூஜை மற்றும் மயூரவாகன சேவையை காண ஏராளமான பக்தர்கள் இங்கு வருவார்கள்.

விருதுகளுக்கு பஞ்சாமிர்தவண்ணம் பாடலுடன் அபிஷேகம் மற்றும் தீபஆராதனை நடைபெறும்.

இரவு விருதுகள் திருக்கோவிலை வலம் வருதல் நிகழ்ச்சி நடைபெறும்.

இரவு 10.00 மணி முதல் 11.00 மணி வரை அசோகசாலவாசம் பாராயணம் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடல்கள் இரவு 11.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை ஆறுகால பூஜை, சகஸ்ரநாம அர்ச்சனை மற்றும் தீபஆராதனை நடைபெறும்.

இங்கு மகேஸ்வர பூஜை அன்னதானம் சேவைகள் நடைபெற்று வருகிறது. தவத்திரு பாம்பன் சுவாமிகள் ஜீவசமாதி சென்னை திருவான்மியூரில் இருந்தாலும் முருகப்பெருமான் சுவாமிக்கு நேரில் காட்சி கொடுத்த ஸ்தலமாக ராமநாதபுரம் பிரப்பன்வலசை இருப்பதால் தவத்திரு பாம்பன் சுவாமிகள் கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான முருக பக்தர்கள் வழிபாடு செய்து வருகின்றனர்.








## இலங்கையில் புத்தரிசி படையல், மலேசியாவில் 8மணி நேர பாதயாத்திரை

# உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் தைபூசம்

அசுரனை அழிக்க அன்னையிடம் வீரவேலை வாங்கி, கையில் ஏந்திய நாளே தைப்பூசம் ஆகும்.

முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக் கியமானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங்களில் எட்டாவது நட்சத்திரம் பூசம் ஆகும். தை மாதத்திலே பூச நட்சத்திரம் வரும் புண்ணிய நாள் தைப்பூச விழாவாக உலக மெங்கும் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தைப்பூசம் முருகப்பெரு மானுடைய விசேஷமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அன்றைய தினம் குழந்தை களுக்கு காது குத்துதல், படிப்பைதொடங்கு தல் போன்றவற்றை சிறப்பாக செய்வார்கள்.

www.aanmeegamalar.com

முருகனை வேண்டிக்கொண்டு காவடி எடுத்தல், போன்ற நேர்த் திக்கடன்களைநிறைவேற்றுவார் கள். இந்த நாளில் ஆறுபடை வீடுகள் உள்ளிட்ட அனைத்து முருகன் கோவில்களிலும், திரு விழாக்கள் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர் என உலகின் பல்வேறு நாடுகளில் உலகெங் கிலும் உள்ள தமிழர்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

### ஏன் இத்தினம் சிறப்பு

தேவர்களுக்கும் அசுரர்களுக் கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறை யிட்டனர்.

தங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை.எனவே தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவ பெருமானிடம் வேண்டினர்.

தேவர்களின் நிலைகண்டு சிவபெருமான், அவர்களின் முறையீட்டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே கந்தன்.

சிவனின்நெற்றிக்கண்ணில் இருந்துவெளி யான 6 தீப்பொறிகள் 6 அழகான குழந்தைகளா யின. கார்த்திகைப் பெண்களால், அக்குழந் தைகள் வளர்க்கப்பட்டு பின்னர் ஆறுமுகங் களுடன் அவதரித்தது.

அப்படி அவதரித்தவரே கந்தன் எனப் படும் முருகனாவார். சிவபெருமானின் தேவியான அன்னனை பார்வதி தேவி யானவள் ஆண்டி கோலத்தில்பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்கு ஞானவேல் வழங் கியது தைப்பூச நாளில்தான்.

அதன்காரணமாகவே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் கோவில்களைக் காட்டிலும் வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



அப்படி அளிக்கப்பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து மனிதர்கா், தேவர்களைக் காப்பாற்றினான்.

தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அரக்கர்களை திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாயில் வதம் செய்து தேவர்கள் நிம்மதி அடையச் செய்தவர் முருக கடவுள். எனவே தான் அசுரர்களை வதம் செய்ய முருகப்பெருமான் பயன்படுத்திய வேலினை வழிபட்டால், தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருப்பதுடன், அந்த சக்திகள் நமக்கு அடி பணிந்து நல்லருளை நல்கும் என்பது ஐதீகம்.

தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்கு கின்றனர்.

சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற

aanmeegamalar.com


பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப்பார்கள். ஆறுமுகப் பெருமானின் அருளை அடைவதற்கு தைப்பூசம் உகந்த நாள். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளிலும் முருகனடியார்கள் பலர் பாதயாத்திரையாகச் சென்று தைப்பூசத்தன்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்து வதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த தைபூசம் இந்தியா மட்டுமல்ல உலகெங் கும் பல நாடுகளில் வெகு விமரிசையாக கொண் டாடப்பட்டு வருகின்றன. உலகெங்கும் தைபூசம் கொண்டாடினாலும் ஒருசில ஊர்களில் வித்தியாசமாகவும் தை பூசத்தை கொண் டாடுகின்றனர்.

**இலங்கையில் புத்தரிசி கொண்டாட்டம்**

தைப்பூசத்தில் தான் யாழ்ப்பாண மக்கள் புதிர் எடுப்பர். தைப்பூசம் முருகனுக்கு உரிய சிறப்பான தினமாகக் கொண் டாடப்படுகின்றது. அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து வீட்டில் இருக்கும் ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வருவர். அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும் பாலுடன் கலந்து வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டி லுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும்.

ஊரில் உள்ள முருகன் கோயில்களில் பால் குடம் எடுத்தும் காவடி எடுத்தும் தத்தம் நேர்த்தி களை நிறைவேற்றுவர்.

**மலேசியாவில்: 8 மணிநேர பாதயாத்திரை**

மலேசியாவில் முருகனுக்கு எட்டுமணி நேரத்திற்கு மேல் பாதயாத்திரையாக செல்வது வழக்கமாக கடைபிடிக்கின்றனர்.

சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து லட்சக்கணக் கான பக்தர்கள் மலேசியா பத்துமலையில் குவிகிறார்கள். தைப்பூச நன்னாளில் பக்தர்கள் கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலிலிருந்து பத்து மலைக்கு அதிகாலையில் தொடங்கி ஊர்வலமாக நடந்து வருகிறார்கள். இதற்கு எட்டு மணி நேரமாகும். நேர்த்திக்கடன் செலுத்த சிலர் காவடி எடுத்து வருகிறார்கள். அலகு குத்தியும் இவ்வளவு தூரத்தை கடந்து நேர்த்திக்கடன் செலுத்துவோர் உண்டு. சுங்கை பத்து ஆற்றில் நீராடிவிட்டு, மலைக்கோவிலுக்கு 272 படிகள் ஏறி வருகிறார்கள்.

**பினாங்கு 3 நாள் தைப்பூசம்**

மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில் உள்ளதண்ணீர் மலை கோவிலில் பினாங்கு தைப்பூசம் மிகவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. தண்ணீர்மலை கோவில் இந்தியா வுக்கு வெளியே அமைந்துள்ள முருகன் ஆலயங்களில் மிகவும் பெரியதாகும். தமிழர்கள் மட்டுமின்றி சீனர்களும் தைப்பூசத்தை மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இத்தைப்பூசத் திருநாள் மூன்றுநாள் நடைபெறும். தைப்பூசத் திருநாளை பினாங்கு மாநில அரசு பொது விடுமுறையாக அறிவித்துள்ளது.

**உலகஅளவில் விடுமுறை:**

முருகனுக்கு உரிய தைப்பூசத்தன்று தமிழகம் மட்டுமின்றி, கேரளாவின் ஒருசில மாவட்டங்கள், புதுச்சேரி, மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு போன்ற வெளிநாடுகளில் விடுமுறை அளிக்கப்படுகிறது. அதேப்போன்று மொரிஷியஸ், தென் னாப்பிரிக்கா, பிஜி ஆஸ்திரேலியாபோன்ற நாடுகளில் ஒருசில மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறைகொடுக்கப்படுகிறது.

P.சரவணன்
B.Sc.,DT.,Ed.,
LIC முகவர்
ஸ்ரீ பராசரர் ஜோதிட நிலையம்
சிவகங்கை ரோடு, மானாமதுரை.
செல்:97919 05666


# தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் உள்ள கால்பிரிவு கிராமத்தில் தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன் திருக்கோவில் உள்ளது. கால்பிரிவு கிராமத்தை சேர்ந்த ஸ்ரீ ஆறுமுக சுவாமி என்ற தீவிர முருக பக்தர் முருக னுக்கு சிறு கோவில் அமைத்து பூஜைகள் செய்து வந்தார்.

எப்போதும் முருகன் மீது தீராத அன்பு கொண்ட அவர் தினமும் பாலபிஷேகம் செய்தும் பூஜை செய்து வந்தார்.

100 ஆண்டுகளுக்கு முன் பங்குனி உத்திரதினம் செல்வமுருகனுக்கு அபிஷேகத்திற்கு வழங்கும் பாலை கன்று குட்டி குடித்து விட்டதாகவும், அபி ஷேகத்திற்கு பால் இல்லை என்று பால் வழங்கும் விவசாயி தெரிவித்துவிட்டார்.

செல்வ முருகன் அபிஷேகத்துற்கு பால் இல்லை என முருக பக்தர் ஆறுமுக சுவாமி மனம் வருந்திய போது 'தீடீர்' என்று வைகை ஆற்றில் ஊற்று தோன்றி குடம் செம்புகளில் தண்ணீர் நிரப்பி அபிஷேகம் செய் என தென் பகுதியில் இருந்து கணீர் குரல் ஒலித்து மறைந்தது.

திருச்செந்தூர் முருகனே கூரியது போல் உடனே ஆறுமுக சுவாமி மற்றும் கிராம மக்கள் வைகை ஆறு சென்று குடம், செம்பு பாத்திரங்களில் ஆற்று நீரை நிரப்பி செல்வமுருகன் கோவிலை நோக்கி ஊர்வலமாக வந்து கோவிலை வந்து அடைந்த போது தண்ணீர் நிரம்பிய குடம் செம்பு பாத்திரங் களில் பால் பொங்கி வழிந்தது.

அதை தொடர்ந்து செல்வமுருகனுக்கு குடம் குடமாக தண்ணீரை அபிஷேகம் செய்தபோது அனைத்தும் பாலாக மாறியது பால் அபிஷேகமும் தங்கு தடையின்றி நடந்தது.

நாகலிங்க பூமரம், தென்னை மரங்கள் அழகிய வயல் வெளி பகுதியில் அமைந்து உள்ளது. செல்வமுருகன்கோவில் இக்கோவில் வாசலில் மகா கணபதியும், செல்வ முருகன் வள்ளி தெய் வானையுடன் காட்சி தருகிறார். காவல் தெய்வ மாக இடும்பன் சுவாமியும் உள்ளது. கோவில் முன்பு அரசமரம், வேம்புமரம் இணைந்த மரத் தடில் இருநாகர் தெய்வங்கள் விநாயகர் சன்னதியும் உள் ளது. சிறிய கோவிலாக இருந்த செல்வமுருகன் கோவில் 2003ம் ஆண்டு பெரிய கோவிலாக கட்டி கும்பாபிஷேகம் நடந்தது. வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தரும் செல்வ முருகனாக இங்கு காட்சி அளிக்கிறார்.

ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதில் ஏராளமான பக்தர்கள் வைகை ஆற்றில் இருந்து தீர்த்த காவடி, பால்காவடி, அலகு குத்தியும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். அன்று முருகனுக்கு நடைபெறும் பால் அபிஷேகத்தை காண ஏராளமானோர் கோவிலுக்கு வருவார்கள். இதுபற்றி கோவில் ஸ்தாபகர் ஏ.ஆர்.பி. முருகேசன் கூறு கையில், தண்ணீரை பாலாக மாற்றியதால் பச்சை தண்ணீரை பாலாக மாற்றிய செல்வமுருகன் எனவும் அழைக்கப்படுகிறது.

கடும் வறுமையில் வாடுபவர் செல்வமுருகனை மன முருகி வணங்கி இன்றும் செல்வநிலை அடைந்து உள்ள னர். வேண்டுதல் நிறைவேறியவர்கள் ஆண்டு தோறும் பங்குனி உத்திர திருவிழா அன்று குடம் குடமாக பால் அபிஷேகம் செய்கின்றனர்.

ஒன்பது சஷ்டி தினம் அன்று விரதம் இருந்து செல்வ முருகனை வணங்கினால் குழந்தை இல்லாதவர்களுக்கும் குழந்தை பாக்கியம் கிடைப்பதாகவும் நம்பப்படுகிறது. பங்குனி உத்திரம் பெரிய திரு விழாவாக நடத்தப்படுகிறது. வயலூர் முருகன் கோவில் நினைவுபடுத்துவது போல் இயற்கை அமைப்போடு செல்வமுருகன் கோவில் அமைந்து உள்ளது.

aanmeegamalar.com

# திருப்பம் தரும் திருகூடல்மலை
# தண்டாயுதபாணி சுவாமி

முருகனின் முதல்படை ஸ்தலம் திருப்பரங்குன்றம் அருகே உள்ளது புஜண்டர்மலை எனப்படும் திருகூடல்மலை உள்ளது.

இந்த மலையில் கட்டிகுளத்தில் அவதரித்த தவ திரு சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி பிரதிஷ்டை செய்து வழி பட்ட நவநீதபெருமாள், ஸ்ரீ பால தண்டா யுதபாணி சுவாமி கோவில் உள்ளது.

தினமும் இங்கிருந்து ஸ்ரீசோமப்பா சுவாமி, ஸ்ரீ மாயாண்டி சுவாமி ஆகியோர் ஸ்ரீமீனாட்சிஅம்மன் யானை மலை யோக நரசிங்க பெருமாள் திருப்பரங்குன்றம் முருகனை தரிசித்து தங்களின் தவவலிமையால் பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங் களைபுரிந்து உள்ளனர்.

இங்கு சித்தர்கள் தவபுரிந்த குகை மற்றும் சித்தர்கள் ஜீவசமாதி கோவில்கள் உள்ளது.



இவை அனைத்தும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி குருநாதர் சூட்டுக் கோல் ராமலிங்கம் சுவாமி நாமத்தில் ராமலிங்கம் விலாசம் என்ற பெயரில் திருகூடல்மலையில் கோவிலும் அடிவாரத்தில் சித்தர்கள் ஜீவ சமாதி கோவில் ஆஞ்சநேயர் பீடம், பசுமடம் உள்ளது.

மலையோறிசெல்ல படி, சாலை வசதி உள்ளது.

தினமும் அன்ன தானம் மற்றும் அமாவாசை பௌர்ணமி நாட்களில் சிறப்பு வழிபாடு பூஜை நடைபெறுகிறது.

திருகூடல்மலையில் சென்று சித்தர்கள் ஜீவசமாதி கோவிலில் வழிபாடு செய்து வரும் பக்தர்களுக்கு தங்களது வாழ்வில் திருப்பம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.



# பாம்பாட்டி சித்தர் உருவாக்கிய
# மருதமலை முருகன் சிலை

முருகப்பெருமான் அமர்ந்து அருள்புரியும் அற்புதத் தலங்களில் ஒன்றுதான் கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலை.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பது வாக்கு. முருகப்பெருமான் அமர்ந்து அருள்புரியும் அற்புதத் தலங்களில் ஒன்றுதான் கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலை.

அருணகிரிநாதரால் பாடப் பெற்றவர் இத்தல முருகப் பெருமான். இந்த ஆலயம் முருகனின் 'ஏழாம் படைவீடு' என்றும் புகழப்படுகிறது.

மருதமலையில் முருகனின் அருள்பெற்ற பாம்பாட்டிச் சித்தர், முருகனுக்கு புதிய சிலை வடித்தார். இந்த சிலையே கருவறையில் இருக்கிறது.

இரண்டு கரங்களுடன் உள்ள இந்த முருகப்பெருமான், பழநி முருகனைப் போலவே, கையில் தண்டத்துடன், இடதுகையை இடுப்பில் வைத்தபடி தண்டபாணியாக காட்சி தருகிறார். தலைக்கு பின்புறம் குடுமி உள்ளது. காலில் தண்டை அணிந்திருக்கிறார். தினமும் ராஜ அலங் காரம், விபூதிக்காப்பு, சந்தனக்காப்பு என மூன்று வித அலங் காரங்களுடன் காட்சி தருவார்.

விசேஷ நாட்களில் வெள்ளிக்காப்பும், கிருத்திகை மற்றும் தைப்பூசம் நாட்களில் தங்க கவசமும் அணிவிக்கப்படும்.

அர்த்தஜாம பூஜையில் மட்டுமே இத்தல இறைவனை, தண்டாயுதபாணியாக சுய ரூபத்தில் தரிசிக்க முடியும். அப்போது இறைவனுக்கு ஆபரணம், கிரீடம் என எதுவும் இல்லாமல், வேட்டி மட்டும் அணிவிக்கின்றனர்.

மலைப்பாறைகளுக்கு மத்தியில் உள்ள குகையில் பாம்பாட்டி சித்தர் சன்னிதி உள்ளது. வலது கையில் மகுடி, இடது கையில் தடியும் வைத்து இவர் அருள் பாலிக்கிறார்.

இவருக்கு அருகில் சிவலிங்கம், நாகர் திருமேனி கள் உள்ளன. முருகப்பெருமானுக்கு பூஜை முடிந்ததும், பாம்பாட்டி சித்தருக்கும் பூஜை செய்யப்படுகிறது.

பாம்பாட்டி சித்தர் தற்போதும் இங்கு முருகனுக்கு பூஜை செய்வதாக ஐதீகம். தினமும் இவரது சன்னிதியில் ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி வைத்து விடுகிறார்கள்.

மறுநாள் இந்த பால் குறைந்திருக்குமாம். சித்தர், இந்த பாலை முருகனுக்கு அபிஷேகித்து பூஜை செய்வதாக நம்பப்படுகிறது.

பாம்பாட்டி சித்தர் சன்னிதியில் உள்ள பாறையில் நாக வடிவம் ஒன்று காணப்படுகிறது. இந்த நாகத்தின் வடிவிலேயே பாம்பாட்டி சித்தருக்கு முருகப்பெருமான் காட்சி கொடுத்ததாக தல புராணம் சொல்கிறது.

இந்த நாகத்தை முருகப்பெருமானாகவே பாவித்து பக்தர்கள் அனைவரும் வழிபாடு செய்கிறார்கள்.

இதன் பின்புறம் பீடம் போன்ற அமைப்பில் மூன்று வடிவங் கள் உள்ளன. இவற்றை சிவன், கணபதி, அம்பிகையாக கருதி பூஜை செய்கிறார்கள். பொதுவாக முருகன் தான் சிவன், அம்பாளுக்கு நடுவில் காட்சி தருவார். இங்கு விநாயகர், பெற்றோருக்கு மத்தியில் காட்சியளிப்பது சிறப்புக்குரியதாகும்.

பொதுவாக அரச மரத்தின் அடியில் தான் விநாயகப்பெருமான் வீற்றிருப்பார். ஆனால் இந்த ஆலயத்தில் அரசு, அத்தி, வேம்பு, வன்னி, கொரக்கட்டை என ஐந்து மரங்கள் இணைந்து வளர்ந்திருக்கும் மரத்தின் அடியில் விநாயகப் பெருமான் இருந்து அருள் பாலிக்கிறார்.

ஐந்து மரங்கள் இணைந்த ஒரே மரத் தின் அடியில் இருப்பதால் இவரை, 'பஞ்ச விருட்ச விநாயகர்' என்று அழைக்கிறார்கள்.

இவருக்கு அருகில் முருகப்பெருமான் மயில் மீது அமர்ந்தபடி, கையில் வேலுடன் காட்சி தருகிறார்.





# தமிழகத்தில் முதல் தங்கதேர் ஓடிய கோவில்



# பழனியில் தங்கதேர் வரலாறு



பழனியில் நடைபெறும் மிக முக்கியமான வழிபாடு தங்கத்தேர் வழிபாடு ஆகும். முதன் முதலில் பழநி மலைக் கோவிலில் தான் தங்க ரதம் அமைக்கப்பட்டது.

அதற்கு பிறகு தான் திருச்செந்தூர், திருத்தணி உள்ளிட்ட மற்ற முருகன் கோவில்களில் தங்கத் தேர்வு அமைக்கப்பட்டு, தங்கத் தேர் பவனி உற்சவமும் நடத்தப்படுகிறது.

முருகனை மனதார நம்பி வழிபடும் பக்தர்களுக்கு முருகன் எப்படி அருள் செய்வார் என்பதற்கு மிகப் பெரிய சாட்சியாக இன்றும் இருப்பது தான் பழநி தங்கத் தேர்.

ஆனால் பழநி முருகன் கோவில் தங்கத் தேர் உருவான சுவாரஸ்யமான கதை பலரும் அறியாத ஒன்றாகும்.

பழநியில் சாது சாமி என்ற இருந்து வந்தார். அவர் தினமும் மலை மீது ஏறி சென்று விட்டு, முருகனை தரிசித்து விட்டு, கண்ணீர் விட்டு அழுவாராம்.

ஏன் அழுகிறீர்கள் என கேட்டால், "இனி மீண்டும் முருகனை நாளை தானே தரிசனம் செய்ய முடியும். அது வரை நான் முருகனை பிரிந்து இருக்க வேண்டுமே" என்பாராம்.

அந்த அளவிற்கு தீவிர முருகப் பக்தராக இருந்த அவரை பெரும் செல்வந்தரான முருகேச முதலியார் என்பவர் வந்து தரிசிக்கிறார்.

முருகேச முதலியார் பழநி கோவில் நிர்வாகியாக இருந்தார். சாது சாமியிடம் சென்று, "சாமி, என்னிடம் அளவில்லாமல் செல்வம் இருக்கிறது.

ஆனால் பல காலமாக எனக்கு குழந்தை இல்லை. என்னுடைய குறை போக நான் என்ன செய்ய வேண்டும்? அதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள்" என கேட்கிறார்.

இதைக் கேட்ட சாது சாமி, "இந்த மலையே நிரம்பி வழியும் அளவிற்கு பால் அபிஷேகம் செய்" என்றார்.

சிறிதும் யோசிக்காத முருகேச முதலியார், பல ஊர்களில் இருந்தும் பால் வரவழைத்து, முருகனுக்கு பாலால் அபிஷேகம் செய்கிறார்.

அந்த அபிஷேக பால் வழிந்து மலையே நனைகிறது. மலையில் வழிந்து ஓடும் அளவிற்கு அபிஷேகம் செய்கிறார். சிறிது நாட்களில் முருகேச முதலியாருக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறக்கிறது.

ஆனந்தம், பக்தி, உணர்ச்சி பெருக்கில் பழநி மலைக்கு ஓடி வந்த முருகேச முதலியார், சாது சாமி காலில் விழுந்து,

"சாமி, நான் ஒன்று கேட்டேன். ஆனால் முருகன் எனக்கு இரண்டாக கொடுத்து விட்டார். முருகப் பெருமானுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டும் என நினைக்கிறேன். என்ன செய்ய வேண்டும் என சொல்லுங்கள். செய்கிறேன்" என்கிறார்.

அதற்கு பதிலளித்த சாது சாமி, " நீ கொடுத்தா முருகன் வாழ போகிறான்? அனைத்தும் அவனுடையது. உன்னுடைய ஆத்ம திருப்திக்காக அவனுக்கு தங்கத்தேர் செய்து வை" என்றார். உடனே முருகேச முதலியாரும் தங்கத் தேர் செய்து வந்து கோவிலுக்கு காணிக்கையாக அளித்தார்.

அவர் அன்று காணிக்கையாக அளித்த தங்கத் தேர் தான் இன்றும் பழநி மலையில் பவனி வருகிறது.

குழந்தை இல்லாதவர்கள் பழநி முருகனிடம் வேண்டிக் கொண்டு, குழந்தை பிறந்தவுடன் இங்கு வந்து தங்கத் தேர் இழுப்பது இன்றும் முக்கிய வழிபாடாக இருந்து வருகிறது.

தங்கத்தேர் இழுப்பதற்கு ரூ.2000 தேவஸ்தானத்தில் செலுத்த வேண்டும்.

aanmeegamalar.com




# பழநி திருஆவினன்குடியில் கம்பீரமாக காட்சிதரும் சனீஸ்வரன்!!

நவகிரகங்களில் ஒருவர், சனிபகவான். சனியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பலரும் பரிகாரம் செய்வதற்குத் திருநள்ளாறு, குச்சனூர் ஆகிய தலங்களுக்குச் செல்வது வழக்கம். அங்கு சென்றிட இயலாதவர்கள் முருகனின் மூன்றாம் படைவீடான பழநி திருஆவினன்குடியில் உள்ள சனீஸ்வரனை வழிபட்டு திருநள்ளாறு, குச்சனூருக்கு நிகரான பலனைப் பெறலாம்

தமிழ்நாட்டிலேயே, ஒற்றைச் சனிக்கான தனிக்கோயில் பழநியில் மட்டுமே உள்ளது. சனீஸ்வரனின் திருவுருவச் சிலையானது, படைப்புச் சிற்பமாக இல்லாமல் முழுவுருவச் சிலையாக உள்ளது.

காக்கை வாகனத்துடன், நின்றகோலத்தில், கிழக்கு நோக்கி முருகனுக்கு எதிர்திசையில் அமைந்துள்ள சிறப்பு உடையது இத்தலம்.

திருநள்ளாறு, குச்சனூர் சனீஸ்வரன் தலங்களுக்கு இணையாகப் பழநி ஆவினன்குடி தலமும் சிறப்புடையது என்பதால் தென்மாவட்டங்களிலிருந்தும் பக்தர்கள் இங்கு வந்து செல்கின்றனர்.

இக்கோயிலுக்கு வருபவர்கள் முதலில் முருகனை வழிபட்டு, பின்னர் சனீஸ்வரனைத் தரிசிக்க வேண்டும். வடைமாலை சாத்தியும், எள் சாதம் படைத்தும், எள் முடிச்சுகளைத் தலையைச் சுற்றி நெருப்பில் இட்டும், விளக்கேற்றியும் இங்கு வழிபடுகிறார்கள்.

சனீஸ்வரனுக்கு உகந்த நாள்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றது.

புரட்டாசி சனிக்கிழமைகள் மிகவும் சிறப்புக்குரியன. சிறப்பு நாள்களில் சனீஸ்வர பகவானுக்கு வெள்ளிக்கவசம் அணிவிக்கப்பட்டு, சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

சுயஜாதகத்தில் அங்காரகன் + சனி இணைவு பெற்றவர்கள் அங்காரகனின் பார்வையில் சனி சனியின் பார்வையில் அங்காரகன் அங்காரகமஹாதசையில் சனிபுக்தி சனிமஹாதசையில் அங்காரகபுக்தி போன்றவர்களுக்கு சிறப்பு ஸ்தலம்!!!

இத்தலத்துக்கு வந்துசெல்லும் பலருக்கும் இங்கு அமைந்துள்ள சனீஸ்வரனின் சிறப்புகள் தெரியாதிருப்பது, வருத்தத்துக்குரியது.

சங்கடங்கள் நீக்கி சகல வளங்களையும் பெறுவதற்கு, பழநி சனீஸ்வரனை வழிபடுங்கள்.






# குன்றக்குடி தோன்றிய வரலாறும் சண்முகநாதரின் அற்புதமும்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பதுவே சான்றோர் கூற்று. அப்படி முருகன் கோயில்கொண்ட மலைத்தலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறப்பும் புராணப் பெருமையும் உண்டு. அப்படிக் குமரன் அருளும் அற்புதத்தலம் தான் குன்றக்குடி. முருகப்பெருமான் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தத் தலத்தின் சிறப்பு காரைக்குடி திருப்பத்தூர் சாலையில் காரைக்குடியில் இருந்து மேற்கே எட்டு கி.மீ தொலைவில் உள்ளது குன்றக்குடி.

வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை என்பதுதானே அடியார்கள் நம்பிக்கை. அப்படியிருக்கையில் மயிலுக்கே ஒரு வருத்தம் நீங்கிய ஸ்தலமாக உள்ளது.

புராணகாலத்தில் சூரன் தன் தம்பியருடன் காஞ்சிபுரத்தில் தவ நிலை மேற்கொண்டிருந்தான். முருகப் பெருமானின் வாகனமாக மாறும் பேற்றினை அடைய வேண்டும் என்பதே அவர்களது தவத்தின் நோக்கம். இதை அறிந்த முருகப்பெருமானின் வாகனமாக விளங்கிய மயில் வருந்தியது. தன் வருத்தம் நீங்க முருகப்பெருமானைத் தியானித்தது. மயிலின் பிரார்த்தனைக்கு இரங்கிய முருகப் பெருமான், மயிலின் மனவருத்தத்தைப் போக்கிடும் விதத்தில் சூரனையும் அவன் சகோதரர்களையும் கணங்களாக்கித் தம் அருகில் வைத்துக்கொண்டார்.

சூரனும் அவனுடைய சகோதரர்களும், முருகப் பெருமானின் வாகனமாக மாறும் பேற்றினைத் தாங்கள் அடையவிடாமல் மயில் மூலம் தடுத்து விட்ட தேவர்கள் மீது சினம் மிகக் கொண்டனர். ஒருமுறை முருகப்பெருமானைத் தரிசிக்க வந்த திருமாலும், பிரம்மாவும் தங்கள் வாகனங்களான கருடனையும், அன்னத்தையும் வெளியில் விட்டுச் சென்றனர். அவ்வேளையில் சூர சகோதரர்கள் மயிலிடம் சென்று, "மயிலே! உன்னால் தங்களை விட விரைவாகச் செல்லமுடியாது என்று கருடனும், அன்னமும் இழிவாகப் பேசிக் கொண்டன" என்று பழிச்சொல் கூறினர்.

அதைக் கேட்ட மயில் சிறிதும் ஆலோசிக்காமல் கோபம்கொண்டு கருடனையும், அன்னத்தையும் விழுங்கி விட்டது. முருகப் பெருமானை வழிபட்டுத் திரும்பிய திருமாலும், நான்முகனும் தங்கள் வாகனங்களைக் காணாது முருகப்பெருமானிடம் முறையிட்டனர். நடந்ததை உணர்ந்த முருகப் பெருமான் மயில் விழுங்கிய கருடனையும், அன்னத்தையும் விடுவிக்குமாறு உத்தரவிட்டார். முருகனின் உத்தரவு கேட்டு கருடனையும், அன்னத்தையும் விடுவித்தது மயில். திருமாலும், நான்முகனும் திரும்பிச் சென்றனர்.

அவர்களுக்கு இன்னல் விளைவித்ததன் காரணமாக மயிலின் மீது சினம் கொண்ட முருகப் பெருமான் மயிலை மலையாகும்படி சபித்தார். 'ஆலோசிக்காமல் அவசரப்பட்டு விட்டோமே' என்று வருந்திய மயில், பெருமானிடம் சாப விமோசனம் கேட்டது. தவறை உணர்ந்து வருந்திய மயிலிடம் பரிவுகொண்ட முருகப்பெருமான், "நீ பாண்டிய நாட்டில் திருப்பத்தூருக்குக் கிழக்கே உள்ள அரசவனத்துக்கு (குன்றக்குடி) போய் மலையாக இரு. அங்கு நான் வந்து உனக்குச் சாப விமோசனம் தருகிறேன்" என்று அருளினார்.

அதன்படியே, குன்றக்குடிக்கு வந்துசேர்ந்த மயில் மலையின் வடிவம் கொண்டு தவம் செய்யத் தொடங்கியது. மயிலுக்கு இந்நிலை உருவாகக் காரணம் சூரனும் அவன் சகோதரர்களுமே என்பதை அறிந்த முருகன் அவர்களை அசுரர்களாகும்படி சபித்தார். அசுரர்களானவர்கள் அடியார்களைத் துன்புறுத்த ஆரம்பித்தனர். அனைவரும் ஈசனை வணங்க ஈசனின் ஆணைப்படி முருகப்பெருமான் ஆறு திருமுகங்களோடு எழுந்தருளி அசுரர்களை அழித்தார் முருகன். சூரனை மயிலாகவும், சேவலாகவும் மாற்றி வாகனமாகவும், கொடியாகவும் கொண்டார்.

அதே நேரத்தில் மலைவடிவம் கொண்டு தவநிலையில் இருக்கும் மயிலுக்கும் அருள்புரியச் சித்தம் கொண்டார் முருகன். மலை வடிவில் இருந்த மயிலை இரு பகுதிகளாக மாற்றி, ஒன்றுக்கு சாரூப்ய பதவி அளித்தவர், மற்றொரு பாகத்தைத் தொடர்ந்து மலையாகவே இருக்குமாறு கூறினார். சாபம் நீங்கப் பெற்ற மயில், `முருகப் பெருமான் தொடர்ந்து அந்த மலையின் மீது எழுந்தருளி, வணங்குபவர்க்கு வேண்டிய வரம் அருளவேண்டும்' என்று வரம் கேட்டது. அதன்படி, முருகப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக குன்றக்குடி மலையின் மீது கோயில்கொண்டார்.

aanmeegamalar.com

# இறந்த மணமகனை உயிருடன் மீட்ட வாழைமர பாலசுப்ரமணியன்





எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார். இறைவனே தேடி வந்து குடியிருக்கும் கிராமம் தான் விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை அருகே உள்ள துலுக்கன்குறிச்சி என்ற சிறிய கிராமம். இக்கோவில் சிவகாசியிலிருந்து சங்கரன்கோவில், கழுகுமலை செல்லும் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. சிவகாசியில் இருந்து 17 கிலோ மீட்டர் தூரமாகும்.

பெயர்க்காரணம்...

150 ஆண்டுகளுக்கு முன்னர் முருகப்பெரு மான் மீது அன்பும் ஆழ்ந்த பக்தியும் கொண் டிருந்த வேலாயுதம் என்ற பக்தருக்கு காட்சி கொடுத்து தான் வாழைமரத்தில் குடியிருப்ப தாக கூறி அருள்பாலிப்பதால் வாழைமர பால சுப்பிரமணிய சுவாமி எனஅழைக்கப்படுகிறது.

துலுக்கன்குறிச்சி கிராமத்தில் வாழ்ந்த தேரியப்பர்வீரம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் வேலாயுதம்.

இவர் தினமும் அதிகாலை வெம்பக் கோட்டை வைப் பாற்றில் குளித்துவிட்டு வனமூர்த்தி லிங்காபுரம் விநாயகர் கோவிலில் உள்ள முருகனை தரிசித்துவிட்டு அன்றாட பணிகளை செய்வதையே வழக்கமாக கொண்டிருப்பார்.

வேலாயுதம் வழக்கம்போல் ஒருநாள்அதிகாலை எழுந்து வெம்பக்கோட்டை வைப்பாற்றில் குளித்து விட்டு முருகனை தரிசனம் செய்ய செல்லும்போது ஆற்றில் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியதால் ஆற்றை கடக்க முடியாமல் போனது.

அதனால் முருகனை தரிசிக்க முடியாமல் தன் இல்லம் வந்து விட்டார். அன்று முழுவதும் வேதனையுடன் இருந்தார்.

இரவு முருகனின் திருநாமத்தை சொல்லியவாறு கண் அயர்ந்த போது கந்தன் கனவில் வந்து வேலாயுதா என்னை காண எங்கும் செல்ல வேண்டாம். நானே உன்னை தேடி வந்து விட்டேன். நீ ஆசையாக பராமரித்து வரும் வாழைத்தோட்டத்தில் ஒரே ஒரு குலை தள்ளிய வாழை மரத்தில் மட்டும்தான் இருப்பதாக சொல்லி மறைந்தார். மறுநாள் காலை வேளையிலும் குளித்து விட்டு தன்னுடைய தோட்டத்தை நோக்கி ஓடிச் சென்றார் மெய் மறந்து செய்வதறியாது திகைத்து நின்றார். காரணம் கனவில் முருகன் கூறிய படி குலையுடன் வாழை மரம் இருந்து அதிசயம்கண்டு மனமுருகி வேண்டி நின்றார். இச் செய்தி பரவியதால் வாழைமரத்தை பக்தர்கள் வழிபட்டனர்.

ஒருமுறை செவல்பட்டி ஜமீன் அரண்மனையில் பிரதான கணக்கு பிள்ளையின் ஒரே மகனுக்கு திருமண விழாவுக்காக அந்த வாழை மரத்தை வெட்டி சென்றனர். ஆனால் வேலாயு தம் வாழை மரத்தை வெட்ட அனுமதிக்க மறுத்து விட்டார். இதனால் மணமகன் தானே சென்று வாழை மரத்தை வெட் டிக் கொண்டு வருவதாக கூறி தோட்டத்துக்கு சென்றார்.

அவரிடமும் வேலாயுதம் தான் வாழைமரம் தர முடியாது என்று உறுதியாக கூறினார். ஆனால் வேலாயுதம் சொல்வதைக் கேட்காமல் தன் கையில் இருந்த அரிவாளால் மரத்தை ஓங்கி வெட்டினான். அடுத்த கணம் வெட்டிய வாழையிலிருந்து ரத்தம் வெளி யேறி நாகமாக மாறி மணமகனின் காலை தீண்டியது. சிறிது நேரத்தில் மணமகன் இறந்துவிட்டான். கணக்குப்பிள்ளை அழுது புரண்டார். தன் மகனை காப்பாற்றுமாறு வேலாயு தம் காலில் விழுந்து கெஞ்சினார்.

என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று முருகனிடம் கேளுங்கள் என கூறினார். நீங்கள் நினைத் தால் காப்பற்ற லாம் என வேண்டினார்கள். வேலாயுதம் தன் கையிலிருந்த பிரம்பால் இறந்த மணமகன் மீது முருகா.. முருகா... முருகா.. என 3 முறை திருநாமத்தை கூறிவிட்டார். உடனே ஒரு அதிசயம் நடந்தது.

இறந்த மணமகன் உயிர் பெற்றான். இதை கண்ட ஜமீன் தார் இந்த இடத்தில் வாழைமர பாலசுப்ரமணியனுக்கு ஒரு கட்டிடம் அமைத்து கொடுத்தார். அதன்படி கோவில் அமைக் கப்பட்டது. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு வேலாயுதம் ஆசி வழங்கினார். அருள்வாக்கு கூறி அனை வருக்கும் நன்மைகள் செய்து வந்தார். இவரது காலத்திற்கு பின்பு அவருடைய மகன் தேரியப்பர் கோவில் திருப்பணியை செய்து வந்தார். ஒருமுறை ஏற்பட்ட திடீர் புயல் மழை நாள் வெள்ளத்தால் கோவில் இடிந்து போனது. இடிந்துபோன கோவிலை புதுப்பிக்கும் வண்ணம் சிறிய அளவில் கோவில் கட்டப்பட்டது.

தேரியப்பர் வாரிசுதாரர்கள் பிழைப்புக்காக வெளியூர் சென்று விட கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி விசாகம் தோறும் பால்குடம் எடுத்து வழிபட்டு வருகின்றனர். வாயு மூளையில் உற்சவர் சிலை அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் புன்னகை தவழும் முகத்துடன் நின்ற நிலையில் இடது கையை தொடையில் வைத்தபடி வலது கையில் அபய முத்திரை பின்னர் வாழைமரம் இருக்குமாறு அற்புத வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இது திருமண தோஷம், புத்திர தோஷம் நோய்களை தீர்க்கும் நிவர்த்தி தலமாக அமைந்துள்ளது. திருமண தடை நீங்கவும் குழந்தை பாக்கியம் பெறவும் நோய்நொடி என்று பெருவாழ்வு வாழவும் சகல சவுபாக்கியம் உடன் வாழையடி வாழையாய் வாழ்வாங்கு வாழ்ந்த ஸ்ரீ வாழைமர பாலசுப்ரமணிய சுவாமி ஆலயம் வந்து வணங்கி வளமோடு வாழ்வோம்.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை தாலுகா துலுக்கன் குறிச்சியில்
எழுந்தருளி பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை தந்து அருள்பாலித்துவரும்

# அருள்மிகு வாழைமர பாலசுப்பிரமணிய சுவாமி

திருக்கோவிலுக்கு அன்புடன் அழைக்கிறோம்

உலக நன்மைக்காக தினந்தோறும் யாகம்,
திருமணம், குழந்தை வரம் வேண்டும்
பக்தர்கள் தங்கள் மனகுறை நீங்க
**தங்கள் கைகளாலேயே**
**யாகம் செய்யலாம்**

## தைபூச திருவிழா
## 1.2.2026 ஞாயிறு

பக்தகோடி பெருமக்கள்
அனைவரும் வருகை தந்து
அருள்மிகு வாழைமர
பாலசுப்பிரமண்ய சுவாமியின்
அருள் பெற்று மகிழ்க



மாதந்தோறும் கிருத்திகை நட்சத்திர
சிறப்பு வழிபாடு நடைபெறும்

தொடர்புக்கு: விழாக் குழுவினர்
**9840545860**

அருள்மிகு வாழைமர பாலசுப்பிரமண்ய
சுவாமி திருக்கோவில் வழிபடுவோர்
அறக்கட்டளை துலுக்கன்குறிச்சி

aanmeegamalar.com

# மகிமை மிகுந்த தீர்த்தங்களை கொண்ட

# திருச்செந்தூர்

**முருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் கடல் சார்ந்தது என்பதால், ஆடி, தை மற்றும் மஹாளய அமாவாசை புண்ணிய தினங்களில், இங்கு வந்து பித்ரு ஆராதனை செய்வது சிறப்பு என்பார்கள் பெரியோர்கள். இதுமட்டுமல்ல, இன்னுமொரு சிறப்பம்சமும் உண்டு. காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துக்களும் இந்தத் தலத்தில் தீர்த்தமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இவற்றில், கந்த புஷ்கரணி எனப்படும் நாழிக் கிணற்றில் மட்டுமே பக்தர்கள் நீராடி வருகிறார்கள்.**

கடற்கரையில் அமைந்திருந்த சில தீர்த்த கிணறுகள் மணல் மூடி தூர்ந்துவிட்டன. அந்தத் தீர்த்தக் கட்டங்களைக் குறிப்பிடும் கல்வெட்டு களும் காணாமல் போய்விட்டனவாம். சிறப்புமிகு 24 தீர்த்தங்களை நாம் அறிந்துகொள்வோமா?

**முகாரம்ப தீர்த்தம்:** இதில் மூழ்குவோர் கந்தக் கடவுளின் கருணை அமுதத்தைப் பருகுவர்.

**தெய்வானை தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் ஆடை அணிகலன், போஜனம், தாம்பூலம், பரிமளம், பட்டு, பூ அமளி என்கின்ற இன்பத்தைப் பெறுவர்.

**வள்ளிதீர்த்தம்:** இந்தத் தீர்த்தம் ஒருமையுள்ளத் துடன் பிரணவ சொரூபமாய் பிரகாசிக்கின்ற கந்தப்பெருமானின் திருவடித் தாமரையைத் தியானிக்கும் ஞானத்தைக் கொடுக் கும்.

**லட்சுமி தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர், குபேரனும் அடைவதற்குரிய செல்வங்களைப் பெறுவர்.

**சித்தர் தீர்த்தம்:** காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களும் நீங்கி முக்திக்குத் தடையாகிய உடல், உலக, பைசாசு என்கிற பகை களை விலக்கி முக்தி வழியை நாடச் செய்யும்.

**திக்கு பாலகர் தீர்த்தம்:** கங்கை, யமுனை, காவிரி முதலிய தீர்த்தங்கள் கொடுக்கும் பலனைத் தரும்.

**காயத்ரீ தீர்த்தம்:** அநேக வேள்விகளைச் செய்தவர் அடைகின்ற பலன்களைப் அருளும்.

**சாவித்ரிதீர்த்தம்:** பிர மாதி தேவர்களாலும் காண்பதற்கு அரிய உமாதேவியின் பொன்னடிகளைப் பூஜித்த பலனைப் கொடுக்கும்.

**சரஸ்வதி தீர்த்தம்:** சகல ஆகம புராணங்க ளையும் அறியத் தகுந்த அறிவைக் கொடுக்கும்.

**அயிராவத தீர்த்தம்:** சந்திர பதாகை முதலிய நதிகளில் நீராடிய பலனைப் பெறலாம்.

**வயிரவ தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் நீராடி யோர் பல புண்ணிய நதிகளில் மூழ்கியவர் அடையும் பலனை அடைவர்.

**துர்கை தீர்த்தம்:** சகல துன்பம் நீங்கி நன்மை கிட்டும்.

**ஞானதீர்த்தம்:** இறைவனைப் பரவுவோருக்கும் பரவு வதற்கு நினைத்தோர்க்கும் நன்மையைக் கொடுத்தருளும்.

**சத்திய தீர்த்தம்:** களவு, கள்ளுண்டல், குரு நிந்தை, அகங்காரம், காமம், பகை, சோம்பல், பாதகம், அதிபாதகம், மகா பாதகம் ஆகியவற்றினின்றும் நீக்கி, சித்தத்தை நன்னெறியில் நிற்கச் செய்யும்.

**தரும தீர்த்தம்:** தேவாமிர்தமாகிய மங்கள கரத்தைக் கொடுத்தருளும்.







**முனிவர் தீர்த்தம்:** மூழ்குவோர் ஜகத்ரட்ச கனைக் கண்ட பலனைப் பெறுவர்.

**தேவர் தீர்த்தம்:** காமம், குரோதம், லோபம் மோகம் போன்ற ஆறு குற்றங்களை நீக்கி, ஞான அமுதத்தை நல்கும்.

**பாவநாச தீர்த்தம்:** சாபங்களை விலக்கி அனைத்துப் புண்ணியார்த்தங்களையும் அளிக்கவல்லது.

**கந்தபுட்கரணி தீர்த்தம் :** சந்திரசேகர சடாதரனுடைய திருவடியை முடிமிசை சூடும் மேன்மையைப் பெறுவர்.

**கங்கா தீர்த்தம்:** இத்தீர்த்தம் முக்திக்கு ஏதுவாய் பிறவிக் கடலைக் கடக்கச் செய்யும் தெப்பம் போன்றிருக்கும்.

**சேது தீர்த்தம் :** சகல பாதகத்தினின்றும் நீக்கி நன்மையைக் கொடுத்தருள வல்லது.

**கந்தமாதன தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்குப் பாவங்களைப் போக்கி பரிசுத்தத்தைத் தர வல்லது.

**மாதுரு தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்கு அன்னையைப் போன்று ஆசீர்வதித்து அதிலும் பன்மடங்கு அதிகமாக பலனைக் கொடுக்கும்.

**தென்புலத்தார் தீர்த்தம்:** இதில் ஒரு தரம் மூழ்கி எள்ளும் தண்ணீரும் இறைத்தவர்களுக்கு இம்மை மறுமையும் சிறந்து விளங்க செந்தி லாண்டவன் திருவருட் கரந்து வாழும் பதத்தைக் கொடுத்தருளுவார்.

மேலும், கோயிலுக்குத் தெற்கே 200 அடி தூரத்தில் நாழிக் கிணறு உள்ளது. பெரிய கிணற்றுக்குள்ளே ஒரு சிறு கிணறாக ஒரு சதுர அடி பரப்பும் ஏழு அடி ஆழமும் உள்ள இந்தத் தீர்த்தம், உவர்ப்பு அற்ற நன்னீராகக் காட்சி தருகின்றது. சமுத்திரக்கரையோரம் இப்படி இனிய நீராக அமைந்துள்ளது கந்தப்பெருமானின் அருளாடலேயாகும். இதில் மூழ்குவோர் சகல நலன்களையும் பெறுவார்கள்.

இத்தகு தீர்த்தச் சிறப்புகள் மிகுந்த திருச்செந்தூருக்கு, ஆடி அமாவாசை மஹாளய அமாவாசை அன்று புனித நீராடி, முன்னோரை ஆராதித்து அருள்பெற்று வருவோம்.


தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்
உரிமையாளர் B.ரெத்ன காளீஸ்வரன்
Cell:94436 1225
70106 18500 / 86680 08318

ரெத்னா பட்டாசுகடை
MULTI BANK ATM/CASH MECHINE
கொரியர் சர்வீஸ்
பட்டாசு மொத்த விற்பனையாளர்
DODLA பால்பொருள் மொத்த விற்பனையாளர்
ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், லேமினேஷன், செல்போன் சேல்ஸ் சர்வீஸ் மற்றும் அனைத்து வகையான ரீசார்ஜ் கார்டுகளும் கிடைக்கும்
9/378, காமராஜர் ரோடு, இளையான்குடி

# மனநல பாதிப்பை நீக்கும் திருமுருகாற்றுப்படை

**– காஞ்சி மஹா பெரியவா –**

சென்னை எண்ணூருக்கு சற்றுத் தொலைவில் உள்ளது காட்டுப்பள்ளி என்னும் சிறு கிராமம். கடலின் கழிமுகப் பகுதியில் உள்ளது அது. அந்தக் கிராமத்தை அடைய வேண்டும் என்றால் தரை மார்க்கமாக வழியில்லை. படகு வழியாக கடலில் ஒரு கிலோ மீட்டர் தூரம் போய்த்தான், அந்தத் தீவான கிராமத்தை அடைய வேண்டும். காஞ்சி மகான் இந்த இடம் தான் என்று இல்லை, எங்கும் போகக் கூடியவராயிற்றே.

ஒரு சமயம் அங்குதான் பர மாச்சார்யார் தனது பரிவாரத்தோடு முகாமிட்டிருந்தார். படகில் போய் அவரைப் பார்த்துவிட்டு வர பக்தர்கள் தவறவே இல்லை. தெய்வத்தின் தரிசனத்திற்கு எங்கு வேண்டுமானாலும் போகலாமே மனதில் மட்டும் பக்தி என்று ஒன்று இருந்தால்.

அந்த சமயம் வானதி திருநாவுக்கரசின் தங்கை மீனா ளுக்கு உடல் நலம் மன நலம் இரண்டுமே குன்றியிருந்தன. எதையும் சாப்பிடாமல் பிரமை பிடித்தவர் போல் எப்போதும் காட்சியளிப்பாள். எதற்கும் காஞ்சி மகானைப் பரிபூர்ணமாக நம்பும் திருநாவுக்கரசு, தன் தங்கையை அழைத்துக் கொண்டு தாயார் மற்றும் குடும்பத்தாருடன் பெரியவாவை சந்திக்க தெரிந்த நபர் மூலமாக காட்டுப்பள்ளி கிராமத்துக்குச் சென்றார்.

சென்றவுடன் மகானின் தரிசனம் கிடைக்க, தனது தங்கையின் உடல் நிலையைப் பற்றி அவரிடம் மெதுவாகச் சொன்னார் திருநாவுக்கரசு. எல்லாவற்றையும் கேட்ட பின், மகான், தங்கை மீனாளைப் பார்த்தார். பிறகு அவரது பார்வை அவரது குடும்பத்தார் பக்கமும் திரும்பியது. மகானின் கண்களின் ஒளி விசேஷமே எல்லா நோய்களையும் போக்க வல்லது அல்லவா? மகான் சிறிது நேரம் மௌன மாக இருந்து விட்டு பிறகு பேசினார் "அவளைத் தினமும் 'திரு முருகாற்றுப்படை' படிக்கச் சொல்லு. எல்லாம் சரியாகி விடும்." என்றார்.

"அவளுக்கு அதிகம் படிக்கத் தெரியாதே" என்று மெதுவாக மகானிடம் திருநாவுக்கரசு சொன்னார்.

"அதனாலென்ன? தெரிஞ்சவரை படிக்கச் சொல்லு இல்லன்னா யாராவது தெரிஞ்சவா படிச்சுக் காட்டட்டுமே! திருமுருகாற்றுப்படை பாடல்கள் அவள் காதில் விழுந்தால் போதும்" என்று சொல்லி தன் கையை உயர்த்தி மீனா ளுக்கு அருளாசி வழங்கினார்.

அவர்கள் எல்லாரும் வணங்கி, மகானிடம் விடை பெற்றுக் கொண்டு, திரும்ப முயன்றார் கள். சற்று தூரம் வந்தவுடன், மடத்தின் ஆட்கள் அவர்களை அழைத்தார்கள்.

"உங்கள் அத்தனை பேருக்கும் சாப்பாடு போட்டு உபசரித்து அனுப்பணும்னு பெரிய வா உத்தரவு' என்று சொன்னபோது




திருநாவுக்கரசு வியந்துதான் போனார்.

அந்தமாதிரி ஒரு தீவில் எதுவுமே சாப்பிடக் கிடைக்காது. இவர்களும் ஊருக்குத் திரும்பி தான் சாப்பிட வேண்டும்.

இது அந்த மனித தெய்வத்துக்குத் தெரியாதா? தன் பக்தர்களை எப்போது அவர் பட்டினியோடு அனுப்பி யிருக்கிறார்? மகானின் கருணையை வியந்து வியந்து போற்றி விட்டு, திருநாவுக்கரசு தன் குடும்பத்துடன், வடை பாயசத்துடன் விருந்து சாப்பிட்டு விட்டு ஊர் திரும்பினார்.



மகான் சொன்னவாறே மீனாளிடம், 'திரு முருகாற்றுப்படை' புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள். ஒரே மாதம்தான் மீனாள் பூரண குணமடைந்தாள். மனக் கோளாறு முழுமையாக விலகி, இயல்பு நிலைக்கு அவள் வந்தது காஞ்சி மகானின் பேரருள்தான் என்கிறார், பதிப்பக ஜாம்பவான் திருநாவுக்கரசு. மகானிடம் பரிபூரண சரணாகதி அடைந்தவர்களை அவர் என்றுமே மறந்ததுமில்லை, கை விட்டதுமில்லை.



# பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதான சேவையில்

# பழனி ஸ்ரீ ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர்

அருள் தரும் முருகனை காண பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு அனைவருக்கும் பலன்களை அள்ளித் தரும் முருகனாக விளங்கும் பழனி மலை முருகனை காண ஆண்டு தோறும் தைப் பூச தினத்தில் அதிக அளவில் பக்தர்கள்

வந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக இரண்டாம் படை வீடான

திருச்செந்தூர் மற்றும் மூன்றாம் படை வீடான பழனிக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்கள் அனைவருக்கும் அவர்களின் பசியைப் போக்கும் வகையில் பழனி ஸ்ரீ ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர் நிறுவனத்தினர் அன்னதானம் செய்து வருகின்றனர்.

பழனிக்கு வரும் பாதயாத்திரை பக்தர்கள் அனைவருக்கும் காலை உணவும் திருச்செந்தூரில் முருக பக்தர்களுக்கு மதியம் அன்னதானம் வழங்கி வருகின்றனர். இந்த சேவையை பழனி முருகன் ஆசியுடன் பல ஆண்டுகள் செய்து வருவதாக ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர் உரிமையாளர் லயன் டாக்டர் எம். முனியாண்டி தெரிவித்தார்.



**பழனி ஆனந்த விலாஸ் நிறுவனத்தின் சிறந்த தயாரிப்புகள்**

சுத்தமான தரமான பசுஞ்சாணத்தில் தயாரிக்கப்பட்ட விபூதி ஆகும். சூப்பர் குவாலிட்டி விபூதி (நெல் உமி சாம்பல் விபூதி). ஜவ்வாது வாசனை விபூதி. வாசனை பூஜா பவுடர். வாசனை பூஜா வில்லைகள், தசாங்கம் பவுடர், ஜவ்வாது பவுடர். மஞ்சள் குங்குமம் போன்ற பூஜை பொருள்களை பழனி வரும் பக்தர்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.






# பழனி முருகனை எந்த கோலத்தில் தரிசித்தால் என்ன பலன் கிடைக்கும்



மனிதனின் சுகவாழ்வுக்கும், இறை வாழ்க்கைக்கும் உகந்த ஒரே இறைவன் பழனி முருகன்தான், இவருக்கு இரண்டு விதமான அலங்காரங்கள் நடைபெறும். ஆண்டி கோலமும், ராஜ அலங்காரமும் இந்த இரண்டு கோலத்தை யார் எந்த காரணத்திற்காக தரிசிக்கலாம் என்பதைப் பற்றி சிறிய அளவில் பார்ப்போம்.

தண்டாயுதபாணி விக்ரகத்திற்கு நான்கு விதமான அபிஷேகபொருட் கள் மட்டும் தான் உபயோகிக்கப் படுகிறது. அவை, நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி என்பவை. மார்கழி மாதத்தில் மட்டும் பன்னீர் உபயோ கப்படுத் தப்படுகிறது. இவைகளில்சந்தனம், பன்னீர் தவிர மற்றவை எல்லாம் தண்டாயுத பாணியின் சிரசில் வைத்து, உட னே அகற்றப்படுகிறது. அதாவது முடி முதல், அடி வரை அபிஷேகம் என்கிற முழு அபிஷேகம் சந்தனத்துக்கும், பன்னீரும் மட்டும் தான். இதில் சிரசு விபூதி என்பது சித்தர் உத்தரவால் பக்தர்களுக்கு வழங்கபடுகிற ஒரு பிரசாதம் அது கிடைப்பது மிக புண்ணியம்.

ஒரு நாளைக்கு ஆறுமுறை தண்டாயுதபாணிக்கு அபிஷேகம் அலங்காரம் செய்யபடுகிறது. இது ஐந்து முதல் ஏழு நிமிடத்துக்குள் முடிந்துவிடும். அபிஷேகம் முடிந்து அலங்காரம் செய்து விட்டால், பின்னர் அடுத்த அபிஷேகம் வரை மாலை சாற்றுவதோ, பூக்களால் அர்ச்சனை செய்வதோ கிடையாது. இரவில் முருகனின் மார்பில் மட்டும் வட்ட வடிவில் சந்தனக் காப்பு சார்த்தபடுகிறது. விக்ரகத்தின் புருவங்களுக்கிடையில் ஒரு பொட்டு அளவுக்கு சந்தனம் வைக்கப்படும். முன்னொரு காலத்தில் சந்தன காப்பை முகத்திலும் சார்த்திக் கொண்டிருந்தனர். பின்னாளில் இந்த முறை மாற்றப்பட்டது. தண்டாயுதபாணிவிக்ரகம் மிகுந்த சூடாக இருக்கும்.

ஆதலால் இரவு முழுவதும், அந்த விக் கிரகத்திலிருந்து நீர் வெளிப்படும். இந்த நீரை அபிஷேக தீர்த்ததுடன் கலந்து,காலை அபிஷேகம் நடக்கும் போது, அங்கு இருக்கும் பக்தர்களுக்கு பிரசாதமாக விநியோகம் செய்கிறார்கள். தண்டாயுதபாணி சிலையை சுற்றி (இது வரை ஒரு போதும் வெளியே உணர்ந் திராத) எப்போதும் ஒரு வித சுகந்த மணம் பரவி நிற்கும். தண்டாயுதபாணி சிலைக்கு இடது பக்கத்தில் ஒரு சின்ன மரகத லிங்கம் உள்ளது. அவரை தரிசிக்க வலதுபக்கமாக சென்று, தீபம் காட்டுதல் வேண்டும். ஏனெனில் தீப ஒளி இல்லாமல் அந்த லிங்கத்தை தரிசிக்க இயலாது. பழனியில் இரண்டு மரகத லிங்கம் உள்ளது.

ஒன்று முருகர் சன்னதியில், இன்னொன்று போகர் சமாதியின் மேல் .இந்த இரண்டையுமே போகர் பூஜை செய்ததாக ஒரு தகவல் உண்டு. தண்டாயுதபாணி சிலையை இராஜ அலங்காரத்தில் தரிசிக்க வேண்டுமா? ஆண்டி கோலத்தில் தரிசிக்க வேண்டுமா? எது சிறந்தது? என்ற கேள்வி பலருக்கு இருக்கலாம்.

ஆனால் ஒருசில காரண காரியங்கள் படி பார்த்தால் ஒருசிலருக்கு இந்த தரிசனம் மிகுந்த பலன் தரக்கூடும். முற்றும் துறந்த தவநிலை, அதாவது அலங்காரம் இல்லாமல் ஆண்டிக் கோலத்தில் பார்க்கும்போது நமக்குள் ஒரு மெய் ஞானம் உண்டாகும் என்பதற்காக,பெரியஞானிக ளெல்லாம் அந்தக் கோலத் தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள்.

முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலை களைக் கடந்தவர்கள் இவர்களெல்லாம்அந்தக் கோலத்தை விரும்பி பார்க் கலாம். வழக்குகளெல்லாம் நடக்கிறது, தீராத நோய்க ளெல்லாம் இருக்கிறது போன்ற பிரச்ச னைகளுக்கு அலங்காரம் இல்லாத முருகனை வணங்குதல் நன்று. 20 வருடமாக வாதாடிக் கொண்டிருக்கிறேன். தீர்ப்பு தள்ளி தள்ளிப் போகிறது என்றால் அதற்கு அலங்காரம் இல்லாத ஆண்டிக் கோல முருகன் வழிகாட்டுவார்.

தீராத நோய்,என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள், அவ்வளவுதான் என்ற நிலையில் அதற்கும் நீங்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரிசிக்கலாம். மன குழப்பம் அடைந்து இருக்கிறார்களே, அவர்களையும் இந்த ஆண்டிக் கோல முருகனை வழி படச் சொல்லலாம். அவர்களுக்கு மன நிலையில் மாற்றங்கள் ஏற்படுகிறது. பேச இயலாதவர்கள், குறை பாடு உள்ளவர்கள், மன எழுச்சி, மன உளைச் சல் உள்ளவர்கள் இவர்களெல்லாம் ஆண்டி கோலத்தைப் பார்த்தால் ஒரு சாத்வீகம், சமத்துவம் அவர்கள் மன திற்குள் பாயும்.

பெண்ணிற்கு கல்யாணம் முடிக்கப் போகிறோம், பத்திரிக் கை அடித்து கும்பிடப் போகிறோம், வீடு விற்பது, வாங்குவது, கட்டுவது, கட்டிய பின் கிரகப் பிரவேசம் செய்வதற்கு சாமி கும்பிடப் போகிறோம் ஆகிய இதுபோன்ற நிகழ்வுகளுக் கெல்லாம் ராஜ அலங்கார கோலத்தில் தரிசிக்கலாம்.

நம்மால் சரி செய்யக்கூடிய விஷயங்களுக்கு ராஜ அலங்கார தரிசனம். நம்மால் முடியாது, மருத்துவராலும் முடியாது, யாராலும் முடியாது போன்ற விஷயங்களுக்கெல்லாம் ஆண் டிக் கோலம் மிக மிக உகந்த தரிசனக் கோலம் ஆகும்.

# முருகப்பெருமான் அருள்புரியும் முக்கியத் திருத்தலங்கள்



பன்னிரண்டுகரங்களோடு போர் தளபதி திருக்கோலத்தில், அதேசமயம் தம்பதி சமேதராக முருகப்பெருமானை தென் சேரிகிரி தலத்தில் தரிசிக்கலாம். இத்தலம் பல்லடம் உடு மலைப்பேட்டை பாதையில் உள்ளது.

❖❖❖

பிரணவத்திற்குப் பொருள் தெரியாத நான்முகனை சிறையில் அடைத்த ஐந்து முக முருகப்பெருமானை ஓதி மலையில் தரிசிக்கலாம். கோவை மேட்டுப்பாளையம் அருகில் உள்ள இத்தலத்தில் நான்முகன் அடைபட்ட இரும்புச் சிறையும் உள்ளது.

❖❖❖

பக்தர்கள் கனவில் வந்து தன் ஆலயத்திலுள்ள கண்ணாடிப் பெட்டியில் ஏதேனும் பொருளை வைக்கச் சொல்லி உத்தரவிடும் முருகனை காங்கேயத்தில் தரிசிக்கலாம். முருகன் உத்தரவுப்படை வைக்கப்பட்ட பொருள் சம்பந்தமாகவே அவ்வருட நிகழ்வுகள் நடப்பது அற்புதம். இத் தலத்தை சிவன்மலை என்றும் அழைக்கின்றனர்.

❖❖❖

கோவில்பட்டிக்கும் சங்கரன்கோவி லுக்கும் இடையே உள்ள கழுகுமலை யில், வழக்கத்துக்கு மாறாக, இடப் புறம் திரும்பியுள்ள மயில் மீது ஆரோ கணித்து வீற்றிருக்கிறார் முருகப் பெருமான். கையில் கரும்பேந்தி அருளும் கந்தனை திருச்சிக்கு அருகே உள்ள செட்டிகுளத்தில் காணலாம்.

❖❖❖

குறமகளான வள்ளியம்மையுடன் முருகப்பெருமான் கருவறையில் வீற்றிருக்கும் அற்புத தரிசனத்தை குமரி மாவட்டம், தக்கலையிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள குமார கோயிலில் தரிசிக்கலாம்.

❖❖❖

மாமல்லபுரம் கல்பாக்கம் பாதையில் உள்ள திருப்போரூரில் என்றும் வற்றாத திருக்குளத்துடன் கூடிய ஆலயத் தில் பனைமரத்தால் ஆன சுயம்பு மூர்த்தியானமுருகப்பெருமானை தரிசிக்கலாம். சிதம்பரசுவாமிகளால் நிறுவப்பட்ட சக்கரம் இத்தலத்தில், முருகப் பெருமா னுக்குச் சமமாக போற்றப் படுகிறது.

❖❖❖

தென்காசியிலிருந்து 15கி.மீ தொலைவில் உள்ள திருமலைக்கேணி குமாரசுவாமி ஆலயத்தில் வஜ்ராயுதம்ஏந்திய அழகே உருவான முருகனை 645 படிக்கட்டுகள் கொண்ட மலையில் ஏறி தரிசிக்கலாம்.

❖❖❖

திருச்சி மதுரை வழித்தடத்தில் திருச்சியிலிருந்து26 கி.மீ. தொலைவிலுள்ள விராலிமலையில் ஆறுமுகங்களுடன் மயில் மீது அமர்ந்தபடி முருகப்பெருமான் அருள்கிறார். அவருக்கு இரு புறமும் வள்ளியம்மையும், தெய்வானையும் நின்றிருக்கிறார்கள்.

❖❖❖

அருணகிரிநாதருக்கு திருப்புகழைப் பாடும் திறமையை அருளிய முருகப்பெருமானை திருச்சிக்கு அருகே உள்ள வயலூர் திருத்தலத்தில் கண்டு மகிழலாம்.

❖❖❖

திருவாரூரிலிருந்து 13.கிமீ தொலைவில் உள்ள எண்கண் தலத்தில், எட்டுக்குடி மற்றும் சிக்கல் தலங்களில் உள்ள அதே தோற்றத்தில் முருகப் பெருமானை காட்சியளிக்கிறார்.

❖❖❖

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர்ஆலயத் திற்கும், காமாட்சி அம்மன் ஆலயத்திற்கும் இடையில் சோமாஸ்கந்த அமைப்பில்குமரக் கோட்டம் ஆலயத்தில் கச்சியப்பருக்கு கந்தபுராணத்தை இயற்ற, திகடச் சக்கர எனும் முதல் அடி எடுத்துக் கொடுத்த வேலவனை தரிசிக்கலாம்.

❖❖❖

நாகை, தில்லையாடிக்கருகில்உள்ள திருவிடைக்கழி தலத்தில் குஹ சண்டிகேஸ்வரரோடு அருள்கிறார்,முருகப் பெருமான். இது அபூர்வமான அமைப்பு.

❖❖❖

சென்னை பாரிமுனையில் கந்த கோட்டத்தில் செல்வ முத்துக்குமார சுவாமியாக தரிசனம் தரும் முருகன், வள்ளலாரால் மகிழ்ந்து வழிபடப்பட்டவர்.

❖❖❖

கோவை கிணத்துக்கடவு எனும் கனககிரியில் உள்ள பொன்மலை யில் முருகப்பெருமான் கோயில் கொண்டிருக் கிறார். இவரை பார்வை இழந்த அடியவர் ஒருவர் விழிக்குத் துணை உன் மென்மலர்ப்பாதங்கள் என திடமாக நம்ப, அந்த அடியவர்க்கு பார்வையை மீட்டு தந்தார் முருகன்.

❖❖❖

aanmeegamalar.com

# பக்தர்களை காக்கும் கணக்கன்பட்டி சித்தர்







பழனி முருகன் திருக்கோவில் அருகில் இருந்து 8கிமீ தொலைவில் இருக்கும் கிராமம் தான் கணக்கன்பட்டி. இங்கும் வாழ்ந்த மிக சக்தி வாய்ந்த மகான் கணக்கன்பட்டி மூட்டை சாமி என்கிற சத்குரு காளிமுத்து பழனி சாமி சித்தர்.

சாய்பாபாவின் மறு அவதாரமாக கருதப்படும் இவர் வாழும் போதே பல அதிசயங்கள் நிகழ்த்தியவர். ஒருநாள் வெளிநாட்டில் இருந்து ஒரு குடும்பம் பேச முடியத தன் குழந்தைக்கு பேச்சு வர பழனி முருகனை காண காரில் வந்து கொண்டு இருந்தனர்.

அப்போது அந்த கார் கணக்கன்பட்டி வழியே வரும் போது அங்கு ஒரு பெரியவர் பச்சை வேஸ்டி சட்டை யுடன் தலை பாகையுடன் வழிமறித்தார். இவர்கள் பயத்துடன் இறங்கினர். இவர்கள் சுத்த சைவம் சாமி அவர்கள் "இந்த பொம்பல போய் எதிருல இருக்கற கடையில் பிரியாணி வாங்கிவா" என்றார்.

இவர்கள் முழித்தார், அருகில் இருந்தவர்கள் சாமி சொல்வதை செய்து விடுங்கள் சாமி சக்தி வாய்ந்தவர் என்றனர்.

மூக்கை பிடித்து கொண்டு வாங்கி வந்தார் அந்தபெண் மணி. இந்த சாப்பாட்டை அந்த பையனுக்கு கொடு என் றார்.

தடுமாறினர் அந்த பெண்மணி பொட்டலம் பிரித்து பார்த்தார் அந்தபெண்மணிவாங்கி வந்த பிரியாணி சாம்பார் சாதம் ஆக மாறி இருந்தது.

இதை கண்டு ஆச்சரி யத்துடன் கை எடுத்து

aanmeegamalar.com

உ

குருவே சிவமெனக் கூறினன் நந்தி -



# ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசாமி சுவாமிகள் ஜீவசமாதி சிறப்பு பூஜை தினங்கள்



| மாதம் | ★ புனர்பூசம் தேதி | நாள் | நேரம் | அமாவாசை தேதி | நாள் | நேரம் | பௌர்ணமி தேதி | நாள் | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 04.01.2026 | ஞாயிறு | பகல்12.00 | 18.01.2026 | ஞாயிறு | [illegible] | 02.01.2026 | வெள்ளி | [illegible] |
| | 31.01.2026 | சனி | பகல்12.00 | | | | 03.01.2026 | சனி | [illegible] |
| பிப்ரவரி | 28.02.2026 | சனி | மஹா குருபூஜை | 16.02.2026 | திங்கள் | [illegible] | 01.02.2026 | ஞாயிறு | [illegible] |
| | | | | 17.02.2026 | செவ்வாய் | [illegible] | 02.03.2026 | திங்கள் | [illegible] |
| மார்ச் | 27.03.2026 | வெள்ளி | பகல்12.00 | 18.03.2026 | புதன் | [illegible] | 03.03.2026 | செவ்வாய் | [illegible] |
| | | | | 19.03.2026 | வியாழன் | [illegible] | 01.04.2026 | புதன் | [illegible] |
| ஏப்ரல் | 23.04.2026 | வியாழன் | பகல்12.00 | 16.04.2026 | வியாழன் | [illegible] | 02.04.2026 | வியாழன் | [illegible] |
| | | | | | | | 30.04.2026 | வியாழன் | [illegible] |
| | | | | 17.04.2026 | வெள்ளி | [illegible] | 01.05.2026 | வெள்ளி | [illegible] |
| | | | | | | | 30.05.2026 | சனி | [illegible] |
| | | | | | | | 31.05.2026 | ஞாயிறு | [illegible] |
| மே | 20.05.2026 | புதன் | பகல்12.00 | 16.05.2026 | சனி | [illegible] | 29.06.2026 | திங்கள் | [illegible] |
| | | | | 14.06.2026 | ஞாயிறு | [illegible] | 28.07.2026 | செவ்வாய் | [illegible] |
| ஜூன் | 17.06.2026 | புதன் | பகல்12.00 | 15.06.2026 | திங்கள் | [illegible] | 29.07.2026 | புதன் | [illegible] |
| ஜூலை | 14.07.2026 | வெவ்வாய் | பகல்12.00 | 13.07.2026 | திங்கள் | [illegible] | 27.08.2026 | வியாழன் | [illegible] |
| | | | | 14.07.2026 | செவ்வாய் | [illegible] | 28.08.2026 | வெள்ளி | [illegible] |
| ஆகஸ்ட் | 10.08.2026 | திங்கள் | பகல்12.00 | 12.08.2026 | புதன் | [illegible] | 25.09.2026 | வெள்ளி | [illegible] |
| செப்டம்பர் | 07.09.2026 | திங்கள் | பகல்12.00 | 10.09.2026 | வியாழன் | [illegible] | 26.09.2026 | சனி | [illegible] |
| | | | | 11.09.2026 | வெள்ளி | [illegible] | 25.10.2026 | ஞாயிறு | [illegible] |
| அக்டோபர் | 04.10.2026 | ஞாயிறு | பகல்12.00 | 09.10.2026 | வெள்ளி | [illegible] | 26.10.2026 | திங்கள் | [illegible] |
| | 31.10.2026 | சனி | பகல்12.00 | 10.10.2026 | சனி | [illegible] | 23.11.2026 | திங்கள் | [illegible] |
| நவம்பர் | 28.11.2026 | சனி | பகல்12.00 | 08.11.2026 | ஞாயிறு | [illegible] | 24.11.2026 | செவ்வாய் | [illegible] |
| | | | | 09.11.2026 | திங்கள் | [illegible] | 23.12.2026 | புதன் | [illegible] |
| டிசம்பர் | 25.12.2026 | வெள்ளி | பகல்12.00 | 08.12.2026 | செவ்வாய் | [illegible] | 24.12.2026 | வியாழன் | [illegible] |

- பௌர்ணமி, அமாவாசை நாட்களில் காலை 6.00, பகல் 12.00, மாலை 6.00, இரவு 12.00 மணிக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெறும் -

- மாதந்தோறும் பகவான் புனர்பூச நட்சத்திரத்தன்று திருவாசக முற்றோதல் - அனைவரும் கலந்து அருள்பெறுக -

வனங்கிவிட்டு பழனி நோக்கி சென்றனர்.

அப்போது அவர்களின் காருக்கு எதிரில் ஒரு வண்டி வந்தது அதை கண்ட அந்த சிறுவன் அம்மா வண்டி என்று கத்தினான்.

அந்த சிறுவனிடம் இதை சற்றும் எதிர் பார்க்காத அந்த பெண்மணி சாமியின் மகிமை கண்டு ஆனந்த கண்ணீர் வடித்தார் .அவர் இருக்கும் திசை நோக்கி வணங்கினார். இவ்வாறாக பலரின் கர்ம வினை தீர்த்து அவர்களின் வாழ்க்கையை மாற்றியவர் நம் சித்தர் கணக்கன்பட்டி மூட்டை சாமி.


இவரிடம் யார் சென்றாலும் போய் அந்த கல்லு எடுத்து அங்க போடு, இங்க கூடு கட்டு என்று சொல்லுவார். ஒரு முறை ஒருவர் நிலம் வாங்க இவரிடம் உத்தரவு கேட்கும் போது, கிழக்கு போய் வடக்கு போ என்று சூசகமாக கூறினார். உத்தரவு கேட்கவந்தவர் இரண்டு நிலம் பார்த்துள்ளார். அதில் ஒன்று வடக்கில் இருந்துள்ளது அதன் வழி கிழக்கு பார்த்து இருந்துள்ளது. கிழக்கு போய் வடக்கு போ என்று சுவாமி இதை தான் சூசகமாக கூறி உள்ளார் என்று எண்ணி அவரும் அந்த நிலத்தை வாங்கி வளர்ச்சி அடைந்துள்ளார்.

இவரின் ஜீவ சமாதிக்கு சென்றால் நிச்சயம் மாற்றம் உண்டாகும்.

இவரின் ஜீவ சமாதியில் ஒரு நல்ல அதிர்வலைகளை நன்றாக உணரலாம். பழனி பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 8கிமீ தொலைவில் உள்ளது பஸ் வசதியும் உள்ளது.

கணக்கம்பட்டி சுவாமிகளின் ஜீவ சமாதி குருபூஜை பன்னிரெண்டாம் ஆண்டுப் பெருவிழா 27.02.2026 முதல் 28.02.2026 வரை நடைபெற உள்ளது.




மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள்,
தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.
V.சுந்தரவடிவேல்
Visit:
www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1


# அமைதியை கடைபிடித்தால் அருள்தரும்
# பாதாள செம்பு முருகன்

திண்டுக்கல்லிருந்து பழனி செல்லும் வழியில் அமைந்துள்ளது பாதாள செம்பு முருகன் திருக்கோயில், பாதாள செம்பு முருகன் கோவிலில் மூலவரோ, உற்சவமூர்த்தியோ இல்லை. முன்னோர்களின் வழிகாட்டு தலின்படி, இந்த இடத்தில் கோவில் இருந்ததாக சொல்லப் பட்டதன் அடிப்படையில் போகர் சித்தரின் அவதாரமான திருக்கோவிலூர் சித்தரால் உருவாக்கப்பட்டு, தற்போது நாம் கண்டு வழிபடும் கோவில் முற்றிலும் புதிதாக வடிவமைக் கப்பட்டு, சிற்ப சாஸ்திரத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது. தல விருட்சமாக மலை நெல்லி உள்ளது. வம்சா வழியாக வழிபட்ட இடத்தில் நமது பாதாள செம்பு முருகன் வடிவமைக் கப்பட்டு, இன்று அருளை வாரி வழங்கும் வள்ளலாக நாம் உணர்ந்து வழிபட்டு மகிழ்கிறோம்.

இந்தக் கோவிலானது கந்தமாறன் வழியில் வந்த, பரம் பரை அறங்காவலர்களின் முயற்சியால் 2021 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் நான்காம் தேதி 21.08.2021 குடமுழுக்கு செய்யப்பட்டு, அதனை ஒட்டி மண்டல பூஜைகளும் நடை பெற்றன.

இறைவனுக்கு எப்படி பூ மாலைகள் சாற்றி வழிபடுவது வழக்கமோ அதேபோல பாதாள செம்பு முருகனுக்கு பக்தர்கள் இன்றல்ல தொன்று தொட்டு செவ்வாய் பகவானுக்கு உரிய கருங்காலி மாலைகள் கருங்காலி வேல் போன்றவை முருகனுக்கு சார்த்தி பூஜை செய்து பயன்பெற்று வருகின்றனர்!

பாதாள செம்பு முருகன் சன்னதியில் சுதந்திரஇந்தியா விற்கு முன்பிருந்தே நாட்டிற்காக போர்புரிந்த போர்வீரர் களுக்கும், இன்றைய பாரத நாட்டைக்காக்கும் இராணுவ வீரர்களுக்கும், பரிவட்டம் கட்டி, முதன்மை மரியாதை செய்வது ஆலய நிர்வாகத்தின் மரபாக இருந்து வருகிறது!

பாதாளம் என்றால் தமிழில் பல்வேறு பொருள்கள் உண்டு. ஒன்று அளவு கடந்தவன் என்றும், மற்றொன்று வலிமை மிகுந்தவன் இராகு அந்த ஆக ஆற்றல்கள் அதிகமுள்ள நமது பாதாள செம்பு முருகனை வழிபடுவதால் நமது தீவினைகள் தொலைந்தோடும் என்பதே உண்மை

கோவில் எல்லையான இராமலிங்கம்பட்டி ஊர், எல்லைப்பட்டி. பகுதியிலிருந்து மௌனமாக வந்து முரு கனை மனமுருகி வழிபட்டு பிறகு வெளியில் வந்து இராமலிங்கப்பட்டி, எல்லைபட்டி வரை ஒரு வார்த்தைகூட பிறருடன் பேசிக்கொள்ளாமல் மோனநிலை மௌனத்தை கடைப்பிடித்தாலே போதுமானது. உங்கள் மனதில் நினைத்த வேண்டுதலும் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை!

பாதாள செம்பு முருகனிடம் மௌனத்தில் இரஞ் சினால் மட்டுமே வேண்டுதல் நிறைவேறும் என்பது நமது ஆலயத்தின் ஐதீகம் மௌனத்தில் இருப்பது என்பது மோன நிலையில் இருக்கும் ஆற்றலை வழங்கும் மௌனத்தினை அனுபவபூர்மாக உணர்ந்த பக்தர்கள் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் இறையனார் எம்பெருமான் பாதாள செம்பு முருகனின் ஆலய வளாகத்தில் அமைதி காத்து அவனின்



அருளை முழுமையாகப் பெற்று நலம் எய்துகின்றனர்

மாற்றுத்திறனாளிகள், மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் திருக்கோவில் நிர்வாகிகள் வழிபட தனிவரிசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றவர்கள் யாராயினும், கண்டிப்பாக இலவச தரிசன வரிசையிலேயே வர வேண்டும் என்ற நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது..




உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், விசேஷங்கள் போன்றவற்றை

Tabloid வடிவில்

சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

9444228203

செல்: 9994323622 / 999416182

aanmeegamalar.com




# HOMELY KITCHEN

VS

# FOOD FACTORY

## What's The Main Difference?

## A: "Irresponsible Chemicals"

**(Responsible vs Irresponsible Chemicals)**

**Chemicals Added In Sweets | Snacks | Sauces | Beverages | Instant Noodles | IceCreams**

Colours | Flavours | Nature Identical Flavours | Preservatives | Improvers | Emulsifiers
Stabilisers | Thickening Agents | Gelling Agents | Acidity Regulators | Moisture Retention Agents
Taste Enhancing Powdery Substances | Spice Replacers

and many more harmful additives that will **never be found in any home.**

## HOMELY KITCHEN IS THE BEST

### THE NEXT BEST RESPONSIBLE KITCHEN

MD COMMUNITY KITCHEN 1980
Responsibly Tasty

Responsible Retail Brands:

akkarai Responsible Snacking | திண்ணை THINNAI Relax & Recharge Responsibly | ICECREAM VAN Homely IceCream Estd. 2018 (Probably, Only IceCream Free of Chemicals!) | ONDRAHA | CHOCOKICK Cafe Daringly Different like you!

Responsible Snack Brands:

SIDEKICK | CHOCOKICK DARINGLY DIFFERENT DIFFERENCES make us ONE | TEATIME FRIEND Dip & Enjoy! | RUSKING More Health. More Wealth | OATIES • 35% Oats in Cookies • | ARTY BATTERY BISCUITS | ARTY BATTERY BUNDOSS

**RESPONSIBLE FOODS IS THE ONE THING WE CARE**

Online: 24/7 Shop at www.akkarai.co.in | www.mdcommunitykitchen.com | www.indianfoods.in | Delivery Across India
Offline: Madurai | Keezhadi | Thattankulam | Chennai
+91 9791900447

aanmeegamalar.com

சிவம் வாழி! உ குருவாலைப் பெண் வாழி! சித்தர்கள் வாழியவே !

# ஓம் ஸ்ரீ சற்குரு சச்சிதானந்தம் பழனிசாமி சுவாமிகள்

மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி

## ஜீவ சமாதி குருபூஜை பன்னிரண்டாம் ஆண்டுப் பெருவிழா

**நாள்: 28.02.2026**
**சனிக்கிழமை**

**கணக்கன்பட்டி செல்வோம்**
**கவலைகளை தீர்ப்போம்**

**குருவடி சரணம் திருவடி சரணம்**




### நிகழ்ச்சி நிரல்

**27.2.2026 வெள்ளிக்கிழமை**

காலை 6 மணி முதல் 10 மணிவரை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் முற்றோதல்

மாலை 5 மணி ஆன்மீக சொற்பொழிவு
7 மணி பக்தி இன்னிசை

**28.2.2026 சனிக்கிழமை**

காலை 3.00 மணி சித்தர் முறை வேள்வி பூஜை காலை 9 மணிமுதல் சிறப்பு ஆன்மீகச் சொற்பொழிவுகள்

நண்பகல் 11.00 மணி தீபாராதனை, மகேஸ்வர பூஜை

பிற்பகல் 2.00 மணி பக்தி இன்னிசை

**தினமும் அன்னதானம் நடைபெறும் இப்புண்ணிய பூமியில் 27.02.2026 வெள்ளிக்கிழமை மற்றும் 28.02.2026 சனிக்கிழமை குருபூஜை சிறப்பு அன்னதானம் நடைபெறும்**

## ஓம் ஸ்ரீ சற்குரு பழனி சுவாமிகள் அறக்கட்டளை

மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 613
94867 76551 94682 12345
www.sarguru.org பதிவு எண்:02-BK IV-2014

நல்லதே நடக்கும்!!!

நன்கொடை செலுத்த ஸ்கேன் செய்யவும்
https://sarguru.org/donation